கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

செய்திகள்

ளரும் எழுத்தாளர் சங்கம், திருச்சி.

சமீபத்தில் வளரும் எழுதாளர்களுக்கென ஒரு போட்டி நடைபெ றது. போட்டிக்கு 150 எழுத்தோவியங்கள் வந்திருந்தன. இவற் கீழ்க்கண்டவை பரிசுக்குரியதெனச் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

சிறுகதை: முதற்பரிசு: 'உயிர் குடித்த நாகம்' தஞ்சை எல். யாணி எழுதியது. இரண்டாம் பரிசுகள்: 'கற்பனைக் கன்னி' மு. பா எழுதியது. 'பணமும் பாவையும்' ஏ. வி. எஸ். ரமணி எழுதிய 'நீலச் சட்டை' வி. அனந்தன் எழுதியது.

கட்டுரை: முதற் பரிசு: 'சொல் செய்த குற்றம் என்ன?' - வ. பையன்; இரண்டாம் பரிசு: 'நண்பன் கணபதி' - வேதா.

கவிதை: முதற் பரிசு: 'அவளே வென்றாள்' - ரெ. மல் இரண்டாம் பரிசு: 'அமைதி எங்கே?' - க. ச. மாணிக்கம்.

நாடகம்: முதற் பரிசு: 'பாசமும் வேதனையும்' - மல்லிகை சு

இவற்றைத் தவிர ஒவ்வொரு பிரிவிலும் பல தகுதிப் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பரிசுகள் ஜூலை 21-ஆம் தேதி தி நடைபெறப்போகும் ஆரம்ப விழாவின்போது அளிக்கப்படு விழா மலரில் பிரசுரமாகும்.

இளங்கோ இளைஞர் மன்றம்

இளைஞர் மன்றத்தின் சார்பில் சிறுவர் பகுதியைக் சுல்வி வைச் சேர்ந்த திரு. எஸ். கருப்பையா செட்டியார் தலைமை துவக்கிவைத்தார். குழந்தை எழுத்தாளர் சங்கத் துணை திரு. தெ. சி தெய்வசிகாமணி ஒரு சிறந்த சொற்பொழிவு நிக செயலாளர் பி. வி. கிரி நன்றி கூறினார். சிறுவர் பகுதியின் நி நா. ஜகந்நாதன், எம் ஏ., தலைவர்; ஏ. பி. சீனிவாசன், பி. ஜி. என். தங்கவேலு - செயலாளர்கள்; பார்த்தசாரதி - பொருளாள

நார்வே நாட்டுக் குழந்தைகளிடையே நே

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 14

15-7-'57

குழந்தைகளே!	பக்கம்	2
கடற் புலி	..	3
வெள்ளை முயல்	..	5
துப்பறியும் மோகன்	..	6
கவியரங்கம்	..	12
காபி ஒழிப்பு மகாநாடு	..	13
காவற்காரன்	..	18
ஓடும் ரெயிலிலே...	..	21
முதலும் முடிவும்	..	24
பிள்ளையார் கோயில்	..	29
நீங்களும் நானும்	..	34
நள்ளிரவில்	..	35
எண்ணிலே படங்கள்	..	38
தபால் பெட்டி	..	39

அட்டைப் படம்-
போட்டோ: சந்தாமியான்

செய்திகள் - 2-ஆம் அட்டை

கிளைக் கழகம் - 3-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

சாமர்த்தியக்காரர்!

வேலாயுதம் என்பவர் ஒரு புகையிலைக் கடைக்காரர். அவரிடம் புகையிலை அதிகமாக இருந்ததே தவிர, வியாபாரம் சரிவர நடக்க வில்லை. அவர் தம்மிடமிருந்த புகையிலை மூட்டைகளை விற்றுவிடுவதற்காக எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டு பார்த்தார். ஒன்றிலும் பலன் கிடைக்கவில்லை. முடிவில் அவர், தன்னிடம் யார் யார் ஒரு ருபாய்க்குக் குறையாமல் புகையிலை வாங்குகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் ஒரு சிகரெட் லைட்டரும், ஒரு கோட் ஹாங்கரும் இனமாக அளிப்பதென்று முடிவு செய்தார். ஒரு கோட் ஹாங்கரும் ஒரு சிகரெட் லைட்டரும் இரண்டு அல்லது இரண்டரை ரூபாய்க்குக் கிடைக்கும் பொருள்கள். இனமாகக் கிடைக்கும் பொருள்களுக்காகவே பலர் அவரிடம் புகையிலை வாங்கத் தொடங்கினார்கள். கடைக்காரரிடமிருந்த புகையிலையெல்லாம் தீர்ந்துவிட்டது. இனம் பொருள்களை மறுநாள் தருவதாகக் கூறிவிட்டுச் சென்றார்.

மறுநாள், அவர் ஒரு பையில் பல பொட்டலங்களைப் போட்டுக் கொண்டு புகையிலை வாங்கியவர்களிடமெல்லாம் ஒவ்வொரு பொட்டலம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

எல்லோரும் ஆர்வத்துடன் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு அப்படியே உட்கார்ந்து விட்டனர். ஏனென்றால் அவர்கள் பொட்டலத்தில் கண்டது ஓர் ஆணியும் ஒரு தீக்குச்சியுமே!

எல்லோரும் கடைக்காரரைச் சண்டை பிடித்த பொழுது அவர், ''ஐயன்மீர், நான் வாக்குத் தவறவில்லை. ஒரு சிகரெட் லைட்டரும் ஒரு கோட் ஹாங்கரும் இனம் என்றேன். அதன்படியே சிகரெட் பற்ற வைக்கும் சாமானும் கோட்டை மாட்ட உதவும் பொருளையும் கொடுத்தும் விட்டேன்'' என்றார்.

—ஏ.பி.விசுவநாதன், செகந்தராபாத்.

குழந்தைகளே!

சென்ற இதழில் பரீட்சையில் தேருத மாணவர்களைப்பற்றி எழுதியிருந்தேன். அதைப் படித்து, மன ஆறுதல் பெற்ற மாணவர்கள் தங்கள் பாராட்டையும் நன்றியையும் எனக்குத் தெரிவிக்கிருர்கள். நான் இந்தப் பாராட்டுக்களையோ நன்றியையோ எதிர்பார்க்கவில்லை. அவர்கள் இந்த ஆண்டில் சிறப்பாக வெற்றி பெறுவதையே எதிர்பார்க்கிறேன்.

கண்ணனைப் பெரும்பாலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும்தான் படிக்கிருர்கள் என்று எனக்கு வரும் கடிதங்களிலிருந்து தெரிகிறது. கண்ணனில் எழுதுகிறவர்கள்கூட, பெரும்பாலும் கல்லூரி மாணவர்களாக மாணவிகளாக இருக்கிருர்கள். ஆகவே, இதைக் குழந்தைகளின் பத்திரிகை என்று கூறுவது சரியா என்று கழுகாசலபுரத்து மாணவர் ஒருவரும் மற்றும் பலரும் என்னைக் கேட்டு எழுதியிருக்கிருர்கள். ஐந்து வயது முதல் பதினறு பதினேழு வயதுவரையுள்ளவர்களுக்கான பல விஷயங்களை நீங்கள் கண்ணனில் பார்க்கிறீர்கள். சில கதைகள் அதிக வயதடையாதவர்களுக்காவும் சில உயர் வகுப்புகளில் படிப்பவர்களுக்காகவும் வெளியிடப்படுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். எனவே கண்ணனைக் குழந்தைகளின் பத்திரிகை என்று குறிப்பிடுவது பொருத்தமே என்று நான் கருதுகிறேன்.

கண்ணனில் கதை, கட்டுரைகளை அங்கத்தினர்களும் சந்தாதார்களும்தான் எழுதலாமா என்று கேட்டுப் பலர் எழுதியிருக்கிருர்கள். இந்தக் கருத்துச் சரியல்ல. யார் வேண்டுமாளுலும் எழுதியனுப்பலாம். நன்ருக, பொருத்தமாக இருக்கவேண்டியதுதான் முக்கியம்.

'அந்தச் சிலை' என்ற தொடர்கதையைப் பாராட்டி, எனக்குப் பல கடிதங்கள் வந்துள்ளன. இதுவரை எந்தப் பரிசுக் கதைக்கும் இத்தனை கடிதங்கள் வந்ததில்லை. இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை அதை எழுதிய நண்பருக்கு இதன் மூலம் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். மற்ருெரு கதையும் விறுவிறுப்போடு செல்வதைப் பலர் குறிப்பிட்டு வருகிருர்கள். கதை முடிந்த பிறகு மேலும் பல கடிதங்கள் வரக்கூடும். எப்படிப் பார்த்தாலும் இந்தத் தடவை பரிசு பெற்ற இரண்டு தொடர் கதைகளும் கண்ணனுக்குப் பெரிய வெற்றியைத் தந்துவிட்டன. அதேபோல இந்த ஆண்டில் வரும் கதைகளும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

சில ஆரம்ப எழுத்தாளர்கள் முதலில் கண்ணனில் எழுதி, பிறகு பெரியவர்கள் பத்திரிகைகளுக்கும் எழுதுகிருர்கள். கண்ணன் பத்திரிகையே தங்களை எழுத்தாளராக்கியது என்று அவர்கள் குறிப்பிடுவதைப் படிக்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. ஆயினும் ஒன்றை மட்டும் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். பத்திரிகைகளில் பெயர் வருவதற்காக அவசர அவசரமாக எழுதித் தள்ளாதீர்கள். குவியல் குவியலாக எழுதுவதனுல் பெருமையில்லை. ஆனுல் ஒன்று இரண்டு மட்டும் அவ்வப்போது எழுதினுலும் எப்போதும் நினைவில் இருக்கக்கூடிய விதமாக எழுதவேண்டும். உயர்ந்த தன்மையுடையதாய் இருக்கவேண்டும். அநுபவமும் அறிவும் பெறப் பெறத்தான் எழுத்து சோபிக்கும். அவசரப்பட்டால் அநுபவமும் உண்டாகாது; அறிவும் வளர்ச்சி பெருது. வளரும் எழுத்தாளர் சங்கம் என்ற ஒன்று திருச்சியில் உற்சாகமுள்ள நல்ல எழுத்தாளர்களால் உருவாகியிருக்கிறது. அதன் துவக்க விழாவின்போது இந்தக் கருத்தை வலியுறுத்துவார்கள் என்று நம்புகிறேன்; நிறைய எழுதவேண்டும் என்பது முக்கியமல்ல; அவசியமும் அல்ல. ஆனுல் நன்ருக எழுத வேண்டும்: உயர்ந்த கருத்துக்களை வளர்க்க வேண்டும் என்பது மிக மிக முக்கியம்.

—ஆசிரியர்.

கதை: 'ஆர்வி' கடற் புலி சித்திரம்: ஸாமி

மரக்கலத்தின் அறையினுள் ராஜகுமாரி பயந்த தோற்றத்தோடு தந்தையை நோக்கி . . .
கடற் புலி!
குழந்தாய்! பயம் ஏன்? காற்று திசை திரும்பும்! அதே போல் நாம் சிறைப்பட்டாலும் விடுதலை பெறுவோம்!
எதற்கும் நான் மாறுவேடம் கொள்வதே நல்லது!
உடனே ராஜகுமாரி போர் வீரனைப்போல் அவசர அவசரமாக; கவசமும் வாளையும் அணிந்து இளைஞனுடையில் காட்சி தருகிறாள் . . .
கொள்ளைக் கலத்தின் தலைவன் மரக்கலத்தைச் சுற்றிக் கொண்டு வருகிறான். வழியில் பல்லவ வீரர்கள் ஈட்டியை நிமிர்த்தி, தலையை வணங்கி வழிவிடுகிறார்கள் .
அரசர் எங்கே?
இதோ இந்த அறையில்!

(தொடரும்)

வெள்ளை முயல்

தே. ப. பெருமாள்

வெள்ளைமுயல் துள்ளுகின்ற
  வேடிக்கை பாராய்! - கண்ணா
  வேடிக்கை பாராய் - இதைக்

குள்ளநரி கண்டுவிட்டால்
  கொன்று தின்னுமே! - கண்ணா
  கொன்று தின்னுமே!

காதைஆட்டிப் புல்லைத்தின்னும்
  காட்சியைக் காணாய்! - கண்ணா
  காட்சியைக் காணாய்! - முயல்

சாதுவான பிராணியாகும்
  சந்தடிக்கே அஞ்சும் - கண்ணா
  சந்தடிக்கே அஞ்சும்:

துலங்குகின்ற முயலுடலின்
  சுத்தமதைப் பாராய்! - கண்ணா
  சுத்தமதைப் பாராய்!

இலங்கநமது வாழ்வில்இந்த
  இயல்பதனைக் கொள்வோம் - கண்ணா
  இயல்பதனைக் கொள்வோம்!

துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

முதலில் சோமுதான் பேச்சைத் துவக்கினான். "காளிமுத்து அண்ணே, அந்தச் செவிட்டுப் பயலைக் கூப்பிட்டு, தலைக்கு இரண்டு இட்லி, மிளகாய்ப்பொடி கொண்டு வரச் சொல்லேன்" என்றான் அவன்.

"ஆமாம் சோமு, எனக்கும் பசிக்கிறது" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டு எழுந்திருந்து போன காளிமுத்து மாடிப்படிகளில் நின்றுகொண்டு யாரையோ கை தட்டி அழைத்து உத்தரவுகள் கொடுத்துவிட்டுத் திரும்பிவந்து உட்கார்ந்துகொண்டான்.

'இட்லி சாப்பிட இவர்களுக்கு வேளை கிடையாதோ?' என்று மோகன் நினைத்த சமயம் அவர்களுக்குள் சம்பாஷணை தொடர்ந்தது. காதைத் தீட்டிக்கொண்டு கவனித்தான் மோகன். 'இன்று இரவுக்குள் இன்னும் என்னென்ன ஆச்சரியங்கள் நடக்கப் போகின்றனவோ!' என்று நகைத்தான் அவன்.

"ஆமாம், அந்த நகைகளையெல்லாம் காட்டில் வைத்திருக்கிறோமே, அதைத் திரும்பி எப்போது எடுத்து வந்து நாம் பங்கிட்டுக் கொள்வது?" என்று கேட்டான் சோமு.

"அடுத்த புதன்கிழமை யன்று அதை எடுத்துக் கொள்வோம். அதுவரையில் அவை அங்கேயே இருக்கட்டும். அவை அங்கே இருப்பது உனக்கும் எனக்கும் ரத்தினத்துக்கும் மட்டும்தான் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. அப்படியிருக்க நீ ஏன் வீணாகப் பயந்து சாகிறாய்?" என்றான் காளிமுத்து.

அதே சமயத்தில் அந்த அறையில் மூன்றாவது ஆள் ஒருவன் பிரவேசித்தான். மோகன் அவனைக் கூர்ந்து பார்த்தான். அவன் சமையல்காரன் போலவும் வேலைக்காரன் போலவும் தோற்றமளித்தான். அவன் கையில் இரண்டு தட்டுக்களில் இட்லி, மிளகாய்ப் பொடி இருந்தன. காளிமுத்துவும் சோமுவும் இவனைத்தான் 'செவிட்டுப்பயல்' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று மோகன் நினைத்தான்.

அவன் இரண்டு தட்டுக்களையும் கட்டில்மீது வைத்தான். காளிமுத்து அவனைப் பார்த்து, "குடிக்கத் தண்ணி கொண்டா" என்றான்.

"காபிதானே? ஆகட்டும், போடறேங்க" என்று சமையல்காரன் பதில் தந்தான்.

"நல்ல செவிட்டுப்பயல்!" என்று தலையில் அடித்துக்கொண்ட காளிமுத்து, "தண்ணி கொண்டா, தண்ணி" என்று உரக்கக் கத்திச் சொன்னான். 'சரி' என்று தலையை ஆட்டிவிட்டு அவன் நகர்ந்தான்.

அவன் போனதும் சோமு, "அண்ணே, இந்த முட்டாளைக் கட்டிண்டு ஏன் மாரடிக்கணும்?" என்று கேட்டான்.

காளிமுத்து, ''அப்படிச் சொல்லாதே, சோமு. நான் அவனைத் தூக்கிட்டு வந்த நாள் முதல் அவன் என்னிடம் ரொம்பவும் ஒழுங்காக வேலை செய்கிறான். அதிலே இன்னொரு சௌகரியம் பாரு, செவிடனாதலால் நாம் என்ன பேசிக் கொண்டாலும் அவன் காதில் விழுவதில்லை. அந்தமாதிரியான ஆள்தானே நமக்கு வேண்டியது!'' என்றான். அப்போது அந்தச் செவிடன் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு வெளியேறினான்.

மேலும் சாப்பிட்டுக்கொண்டே சோமு, ''ஏன் அண்ணே, ராவோட ராவா கல்யாணச் சந்தடியிலே அந்தப் பெண்ணைத் தூக்கிட்டு வந்தோமே! அது இங்கே தான் இருக்கா?'' என்று கேட்டான்.

மோகனின் காது வளைந்தது. அந்தப் பெண் யார்? ஒருகால் லீலாவாக இருக்குமோ!

காளிமுத்து பதில் கூறினான்: ''ஆமாம், அந்தப் பெண்ணை ஒரு அறையில் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறேன். வேளா வேளைக்குச் சோறும் தண்ணியும் கொடுக்கச் சொல்லி யிருக்கிறேன்.''

சோமு, ''அந்தப் பெண்ணை எதற்காக இங்கே தூக்கிட்டு வந்திருக்கே?'' என்று கேட்டான்.

''என்னடா நீ, அசட்டுக் கேள்வியெல்லாம் கேட்கிறே? அந்தப் பெண்ணை இங்கே வைத்துக் கொண்டுதான் அவள் அப்பனுக்கு 'லெட்டர்' எழுதிப் பயமுறுத்தணும், அவன் பெரிய பணக்காரன். இவளை வைத்துக் கொண்டு தான் பணம் கறக்கணும் .. இப்பத்தானே அந்தத் திவான்பகதூர் வீட்டு விஷயமும் ராவ்சாகிப் விஷயமும் முடிந்தது?'' என்று ஒரு இட்லி விள்ளலை வாயில் போட்டுக் கொண்டு உற்சாகமாகக் கூறினான் காளிமுத்து.

''எனக்குக்கூட ஆச்சரியமாக இருக்கு, அண்ணே. நீ எவ்வளவு தந்திரமா வேஷம் போட்டுக் காரியத்தை முடிச்சிருக்கிறே? திவான் பகதூர் தினகரத்தினம் வீட்டிலே சபாபதியாக இருந்தவன், ராவ்சாகிப் சுந்தரத்தின் வீட்டிலே முத்துவா மாறிட்டே! பலே பலே! உன் சாமர்த்தியம் யாருக்கும் வராது அண்ணே'' என்றான் சோமு.

''அதற்குள்ளே ஒரே முட்டா சந்தோஷப்படாதே. போலீஸ் இப்ப கொஞ்சம் ஜரூராயிருக்கும்! ஆமாம்!'' என்று எச்சரித்தான் காளி.

''அவங்க என்ன ஜரூராயிருந்தா என்ன? நம்மைக் கண்டுபிடிக்க எவனாலும் முடியாது'' என்றான் சோமு.

''அப்பா, இப்பத்தான் உன்னிடம் கொஞ்சம் தைரியம் தலை காட்டுது!'' என்று 'சர்டிபிகேட்' வழங்கினான் காளிமுத்து.

இவர்கள் இப்படி முட்டாள்தனமாக மனத்தில் இருந்ததையெல்லாம் வெளியில் சொல்லிக்கொண்டிருந்ததைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்



மோகன். தன் அதிர்ஷ்டத்தை நினைத்துப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பூரிப்பே உண்டாயிற்று. இதேபோல் இன்னும் கொஞ்சநேரம் இந்தக் கட்டிலுக் கடியில் கஷ்டப்பட்டுக் கழித்து விட்டால் அப்புறம் கொண்டாட்டந்தான்! ஸி. ஐ. டி. சிவசாமிக்கே மிகவும் பெருமையாக இருக்கும். சப்-இன்ஸ்பெக்டர் சாரங்கபாணி ஆச்சரியத்துடன் வாயைப் பிளப்பார், 'இந்தச் சிறிய பையனா இவ்வளவு பெரிய திருடர்களைக் கண்டுபிடித்து விட்டான்!' என்று. அதிருஷ்டதேவதை நம் பக்கம் இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்?-இவ்வாறு எண்ணி மனமகிழ்ந்தான் மோகன். ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை.

அதிருஷ்ட தேவதைக்குக்கூட அப்போது மோகனிடம் பொறுமை உண்டாகியிருக்கவேண்டும். அவள் மனம் பொறுமல் தும்மல் தேவதையைத் தூண்டிவிட்டாள். தும்மல் தேவதை தன் வேலைத்தனத்தைக் காட்டிவிட்டாள்!

கட்டிலுக்கடியில் ஒட்டடைகளுக்கிடையில் படுத்துக்கொண்டிருந்த மோகனுக்கு மூக்கை என்னவோ செய்தது. அடுத்த நிமிஷம் யாருக்காகவும் தயங்காமல் ஒரு தும்மல் மோகனிடமிருந்து வெளிப்பட்டது.

''ஆ..ஆ..அஹ்ச்!''

தும்மலை எவ்வளவோ அடக்கப் பார்த்தும் மோகனால் வெற்றியடைய முடியவில்லை. தன்னையும் மீறித் தும்மிவிட்டான்.

அதிலேதான் வந்தது ஆபத்தெல்லாம்!

9. சந்தோஷச் சாமியார்!

இந்தச் சம்பவங்களுக்கு முதல் நாள் சி. ஐ. டி. சிவசாமி தன் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தபோது 'டிர்ரிங்.. டிர்ரிங்..டிர்ரிங்' என்று டெலிபோன் மணி அடித்தது.

ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டான் சிவசாமி. ''ஹலோ!'' என்ற குரல் கேட்டது.

''ஹலோ மிஸ்டர் சாரங்கபாணி! என்ன விஷயம்?'' என்று கேட்டான் சிவசாமி.

''அட, நான்தான் பேசுகிறேன் என்று எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று வியப்புடன் கேட்டார் சாரங்கபாணி.

''உங்களோடு இவ்வளவு நாள் பழகியபிறகும் உங்கள் குரலை நான் கண்டுபிடிக்கவில்லையானால், இந்த ஸி. ஐ. டி. வேலையையே விட்டு விட்டுப் போக வேண்டியதுதான். அது இருக்கட்டும், உங்கள் வீட்டில் இன்றைக்கு டிபன் 'ஹல்வா' போலிருக்கிறதே! என் ஊகம் சரிதானா?''

''அட அட, எப்படிக் கண்டு பிடித்தாய்?''

''போனில் வாசனை அடித்தது. அதுதான் கேட்டேன்!''

''ஹஹ்ஹா! நல்ல வேடிக்கை ஆசாமிப்பா நீ!..அது இருக்கட்டும், இப்போது என்னோடு ஒரு இடத்துக்கு வரவேண்டுமே!''

''நான் தயார்.''

''எந்த இடத்துக்கு என்று நீ கேட்கவில்லையே!..சந்தோஷ சாமியார் என்று ஒருவரைப்பற்றி உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா? அவரிடம்தான்..''

''நான்தான் தயார் என்றேனே!''

''இப்போதே உன் வீட்டுக்கு வரட்டுமா? இருவருமாகப் போகலாம்.''

''தாராளமாக, வரும்போது 'ஹல்வா' கொண்டு வாருங்கள்!.. சாமியாருக்கு அல்ல, எனக்குத்தான்!''

''ஹஹ்ஹஹ்ஹா!''

* * *

அவ் வட்டாரத்தில் சந்தோஷச் சாமியாரின் பெயர் இன்னும் பிரபலமாகவில்லை. ஆனால் அவரை அறிந்தவர்கள் அனைவரும் அவரிடம் அளவற்ற பக்திகொண்டிருந்தனர்.

இந்தச் சாமியார் மற்றச் சாமியார்களைப்போல் இல்லை. இவர் ஓர் இடத்தில் நிலைத்துத் தங்கியது கிடையாது. தமக்காகக் கவலைப்பட்டதே கிடையாது. எப்போதும்

எந்நேரமும் சிரித்தபடியே இருப்பார். அதனால்தான் இவருக்குச் சந்தோஷச் சாமியார் என்ற பெயர் ஏற்பட்டது.

இவர் கட்டியிருக்கும் வேஷ்டியைவிட அழுக்கான ஒன்று இருக்க முடியாது. கொஞ்சம் தாடி வளர்ந்திருக்கும். மேலே சட்டை கிடையாது; காவி வேஷ்டி மட்டுமே இவர் உடைமை. இவர் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எதையாவது சொல்வார். ஆனால், அவருக்கு எதிர்காலத்தைப்பற்றி அறியும் சக்தி உண்டு என்றும் இவர் சொல்வதெல்லாம் அப்படியே பலிக்கும் என்றும் நம்புகிறவர் பலர். அவர்களுள் ஒருவர்தான் சப்-இன்ஸ்பெக்டர் சாரங்கபாணி.

முதன் முதலில் சாரங்கபாணிக்குச் சாமியாரிடம் நம்பிக்கை இருக்கவில்லை. 'இவராவது, எதிர்காலத்தைப்பற்றிச் சொல்வதாவது! எல்லாம் வெறும் வேஷம்!' என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் ஒரு நாள் இவரும், இன்னொரு கான்ஸ்டபிளும் ஏதோ கேஸ் விஷயமாக அடுத்த ஊருக்குப் போகப் பஸ் ஸ்டாண்டில் காத்திருந்தனர். அப்போது சாமியார் அங்கே வந்தார்.

அவரைப் பார்த்துச் சாரங்கபாணி கேலியாக, "என்ன சுவாமிகளே, என்னுடன் பஸ்ஸில் வருகிறீர்களா?" என்று கேட்டார்.

சந்தோஷச் சாமியார், "ஐயையோ, நான் வரவில்லை. நீயும் போகாதே. அவன் முரடன். உன்னைக் கொன்றுவிடுவான்" என்றார்.

சாரங்கபாணி என்ன நினைத்தாரோ, அவர் பஸ்ஸில் போகவில்லை. அவருடன் வந்த ஆள் மட்டும் அதில் ஏறிப்போனான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்தப் பஸ் ஒரு மரத்தில் மோதிப் பெரும் நாசம் ஏற்பட்டுள்ளதாகவும், பிரயாணிகளில் பலர் இறந்து விட்டதாகவும் செய்தி வந்தது. அது முதல் சாரங்கபாணிக்குச் சாமியாரிடம் பக்தி ஏற்பட்டுவிட்டது.

சந்தோஷச் சாமியாரைப்பற்றிச் சாரங்கபாணி, சிவசாமியிடம் அடிக்



1-வது தேனீ: என்னங்க வெளியிலே கிளம்பிட்டீங்களா?

2-வது தேனீ: யாரோ ஒருவர் தேன் ஒழுகப் பேசறுங்களாம். அதற்குத்தான் போறேன்.

கடி சொல்லியிருக்கிருர். ஒரு நாள் சிவசாமியையும் அவரிடம் அழைத்துப் போவதாயும் அவரைப் பார்த்ததும் அவரிடம் அவனுக்குப் பக்தி உண்டாகிவிடும் என்றும் சொல்லியிருந்தார். அதற்காகத்தான் சிவசாமிக்கு அவர் போன் செய்தார்.

சாமியார் அந்தக் காட்டை விட்டு அதிகமாக வெளியே வருவதில்லை. அங்கேயே ஒரு பழங்காலத்து மண்டபம் இருந்தது. அதில்தான் அவர் அநேகமாகத் தங்கியிருப்பார். அந்த இடத்துக்கு 'ஜீப்'பில் சிவசாமியும் சாரங்கபாணியும் சென்றனர்.

அவர்கள் சென்றபோது சாமியார் அங்கேதான் உட்கார்ந்திருந்தார். இருவரையும் பார்த்ததும் சாமியார் ஒரு புன்னகை செய்தார்.

சாரங்கபாணி அருகில் பணிவுடன் நின்றபடி, "நான் யார் தெரிகிறதா, சுவாமிகளே?" என்று கேட்டார்.

"தெரிகிறது, தெரிகிறது" என்று அவர் தலையாட்டினுர்.

பின்னர், "தெரியாமல் என்ன? நீ தாசில்தார்தானே?" என்ருர் சாமியார்.

"தாசில்தாரா? நான் இன்ஸ்பெக்டர் இல்லையா, சுவாமிகளே!"

"ஏன் இல்லே? இன்ஸ்பெக்டர் தான்!"

"பின்னே தாசில்தார் என்று சொன்னீர்களே!"

"சொன்னேன்."

"அது ஏன், சுவாமி?"

"அது ஏன்?"

"நான் மனத்தில் ஒரு காரியம் நினைத்துக்கொண்டிருக்கிறேன். அது காயாகுமா பழமாகுமா, சுவாமிகளே?"

"காயாகுமா, பழமாகுமா?"

சாமியார் இப்படியே பதில் சொல்லிக்கொண்டு போனுர். சாரங்கபாணி சிவசாமியைப் பார்த்து, "சிவசாமி, நாம் வந்த சமயம் நல்ல சமயம் இல்லை. இன்னெரு நாள்தான் வரவேண்டும்" என்ருர்.

"நான் அவரை ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டு விடுகிறேன்" என்று சாரங்கபாணியிடம் சொல்லிவிட்டுச் சிவசாமி, "சுவாமிக்கு என்னைத் தெரிந்திருக்கவேண்டுமே!" என்ருன்.

சாமியார் அவனை ஒரு கணம் விழித்துப் பார்த்தார். "தெரிந்திருக்க வேண்டுமே!" என்று சொன்னுர்.

"நான் யார்?" என்று சிவசாமி கேட்டான்.

"நீ கடன்காரன்" என்ருர் சாமியார்.

சாரங்கபாணி சிரித்தார். சிவசாமி சாமியாரை ஒரு கணம் உற்றுப் பார்த்தான். பிறகு, "உங்கள் கூட்டாளிகள் சௌக்கியமா, சுவாமிகளே?" என்று கேட்டான்.

இது அந்தச் சாமியாரைத் தூக்கி வாரிப் போட்டிருக்க வேண்டும். சாமியார் மருள மருள விழித்தார். சாரங்கபாணி சீற்றத்துடன் சிவசாமியை உற்றுப் பார்த்தார். சிவசாமி சிரித்தபடி, "கவலைப்பட வேண்டாம், சுவாமிகளே. வெறும் ஊகம்தான். விளையாட்டுக்காகக் கேட்டேன்" என்ருன். சாரங்கபாணியும் சிவசாமிக்காகச் சாமியாரிடம் மன்னிப்புக் கேட்டார்

சிவசாமி எழுந்தான். "போய் வருகிறேன், சுவாமிகளே! நீங்கள்

அவசர டைரெக்டர்

ஒரு ஸினிமா டைரெக்டர் படப்பிடிப்பு வேலையில் மூழ்கியிருந்தார். அந்த மும்முரத்தில் பென்சிலை எங்கேயோ வைத்துவிட்டுத் தேடினார்.

''எங்கே என் பென்சிலை வைத்தேன்?'' என்று தன் உதவியாளரைப் பார்த்துக் கேட்டார்.

''உங்கள் காதில்!''

டைரெக்டர் திகைத்துவிட்டு, ''சீ! நீ ஓர் உதவியாளனா? எந்தக் காதில் என்று கூடவா உனக்குச் சொல்லத் தெரியாது?'' என்று சீறி விழுந்தார்.

எப்போதும் என்னை நினைவில் வைத்துக்கொண்டிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்'' என்று கூறிக் கண்ணைச் சிமிட்டிவிட்டு நகர்ந்தான். சாரங்கபாணியும் சுரத்தே இல்லாத குரலில், ''சுவாமிகள் நம்மை மன்னிக்க வேண்டும். அவன் வெறும் விளையாட்டுப் பையன். அதிகப் பிரசங்கித்தனமாக ஏதோ கேட்டுத் தங்களை அவமானப்படுத்திவிட்டான்'' என்று கூறி விடை பெற்றுக்கொண்டார். சாமியார் தலையை ஆட்டினார். ஸி. ஐ. டி. சிவசாமியும் சாரங்கபாணியும் போலீஸ் ஜீப்பில் ஏறிக் கண்களிலிருந்து மறையும் வரையில் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு ஒரு நெடிய பெருமூச்சு விட்டார். அவர் கண்களில் முன்பு காணப்பட்ட திகில் இப்போது மறைந்திருந்தது.

சாரங்கபாணிக்குச் சிவசாமியின் மீது கோபமான கோபம். தான் மிகவும் போற்றி வந்த மதிப்புக்குரிய சாமியாரை ஒரு கணத்தில் தூக்கி யெறிந்துப் பேசிவிட்டானே என்று அவருக்கு ஆத்திரம். ஜீப் ஓடிக்கொண்டிருக்கும் போது அவர் தன் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டு வெளிப்புறக் காட்சிகளைக் காண்பதில் லயித்திருந்தார். அந்தச் சமயத்தில் சிவசாமி ஒரு முக்கியமான காரியத்தைச் செய்துவிட்டான்.

தன் கால்சட்டைப் பையிலிருந்து கசங்கிய ஒரு கடிதத்தைக் கையில் எடுத்துப் பிரித்துப் பார்த்தான். ஒரு முறை அதைக் கவனமாகப் படித்தான். பிறகு ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக மீண்டும் சாரங்கபாணி அறியாமல்-அதைத் தன் 'பாண்ட்'டில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டான். சாரங்கபாணி திரும்பிப் பார்த்தபோது சிவசாமி வெளிப்புறம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டார்.

ஜீப் போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும், சிவசாமி ஒரு கான்ஸ்டபிளை அழைத்தான். அவனுக்கு ரகசியமாகச் சில உத்தரவுகள் கொடுத்தான். போலீஸ்காரன் தலையை ஆட்டிவிட்டு நகர்ந்தான்.

இது நடந்த மறுநாள் இரவுதான் மோகனுக்குச் சில அநுபவங்கள் ஏற்பட்டன. காட்டுப் பாதையில் காரில் ஏறிக் காளிமுத்துவையும் சோமுவையும் பின் தொடர்ந்து சென்றது, அவர்களது இருப்பிடத்தை அறிந்தது, அவர்கள் ரகசியமாகப் பேசியவற்றையெல்லாம் கேட்டு, வெற்றி பெறும் தறுவாயில் தும்மியது ஆகிய விவரங்கள் நமக்குதான் தெரியுமே!

(தொடரும்)

எது முக்கியம்?

ஆண்ட்ரூ கார்னீஜி என்பவர் அமெரிக்காவில் பெரிய கோடீசுவரர். சிறந்த அறிவாளி. ஒரு சமயம் அவரைப் பார்த்து ஒருவர், ''ஒரு தொழில் மேன்மையுறுவதற்கு தொழிலாளி, முதலாலி அல்லது அறிவாளி இந்த மூவரில் யார் முக்கியமானவர்?'' என்று கேட்டார்.

ஆண்ட்ரூ கார்னீஜி உடனே, ''ஒரு முக்காலியில் எந்தக் கால் முக்கியமான கால்?'' என்று திருப்பிக் கேட்டார்.

அன்புத் தங்கையே!

அன்புத் தங்கையே அன்புத் தங்கையே
பாடத் தெரியுமா?—தமிழ்ச்
சங்கம் வளர்த்த மன்னர் புகழைப்
பாடத் தெரியுமா? (1)

முல்லைக் கொடி படர்ந்து கீழே
மண்ணிற் கிடந்தது—கொடை
பாரி வள்ளல் எடுத்து வைத்தே
தேரில் கிடத்தினான். (2)

அழகுத் தோகை விரித்து மயிலும்
ஆடி மகிழ்ந்திட—பேகன்
குளிரில் நடுங்குதென்று எண்ணிப்
போர்வை அளித்திட்டான். (3)

அறமும் திறமும் சேர்ந்த வேந்தர்
ஆண்ட நாடிது—புகழ்
கொண்டோர் போற்றும் சங்கப் பாடல்
இங்கே இருக்குது. (4)

—நெடுமாறன், தஞ்சை

காபி ஒழிப்பு மகாநாடு

எ. ந. கணபதி

[மாநாட்டுப் பந்தலில் கூட்டம் நெரிகிறது. முகப்பில் ''காபி ஒழிப்பு மாநாடு'' என்ற போர்டு கண்ணைக் கவரும்படி அமைக்கப்பட்டுள்ளது]

ஒலிபெருக்கி: அன்பர்களே! அகில இந்தியக் காபி ஒழிப்பு மாநாடு இன்னும் சில விநாடிகளில் ஆரம்பமாகப் போகிறது. அதுவரை அமைதியாக இருக்க வேண்டுகிறோம்.

[மேடையில் ஈர்க்குச்சி போன்ற ஒருவர் வருகிறார்]

ஸ்ரீமான் கொத்தவரங்காய்: அகில உலகிலும் எந்த நாட்டிலும் இதுவரை நடந்தறியாத அதிசயமான இந்தக் காபி ஒழிப்பு நமது நாட்டில் அமலுக்கு வரப்போகிறது. அதையொட்டி நமது சர்க்காருக்கு ஆலோசனைகள் கூறுவதற்காகக் கூட்டப்பட்டுள்ள இந்த அகில இந்தியக் காபி ஒழிப்பு மாநாட்டிற்கு மகாகனம் பூசனிக்காய் அவர்களைத் தலைமை தாங்க வேண்டுகிறேன்.

ஸ்ரீமான் புடலங்காய்: நான் அதை ஆமோதிக்கிறேன். அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஸ்ரீமான் பூசனிக்காயைத் தேர்ந்தெடுத்தது 'கன' பொருத்தமாக இருக்கிறது.

[குண்டோதர உருவம் படைத்த பூசனிக்காய் தம் பெருத்த உடலை மேடைமேல் ஏற்றச் சிரமப்படுகிறார். அவருக்கு உதவுவதற்காகப் புடலங்காய் கை கொடுக்க, இரண்டு பேருமாகக் கீழே விழுந்து விடுகின்றனர். சபையில் ஒரே சிரிப்பு. பின்னர் நான்கு பேர் ஒத்துழைப்புடன் ஒரு வழியாகப் பூசனிக்காய் மேடை ஏறிப் பேசுகிறார்]

ஸ்ரீமான் பூசனிக்காய்: தலைவர் அவர்களே.... (கொத்தவரங்காய் லேசாக இடிக்கிறார்) ஓகோ! நான்தான் தலைவரோ? மகாநாட்டில் கலந்து கொள்ளும் அன்பர்களே, பொது மக்களே! எல்லோருக்கும் சிறியேனின் தாழ்மையான வணக்கம். இந்த அகில இந்தியக் காபி ஒழிப்பு மாநாட்டிற்கு எளியேனைத் தலைமை தாங்க அழைத்ததற்காக நான் ரொம்பவும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் அடியேன் இதுவரையிலும் எங்குமே தலைமை வகித்தது கிடையாது. எங்கள் வீட்டிலேகூட என் வீட்டுக்காரி வைத்ததுதான் சட்டம். (கூட்டத்தில் சிரிப்பு) இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? பெண்கள் தலைமையில் வீட்டு நிர்வாகம் நடந்தால்தான் சிறப்பாக இருக்கும் என்பது எளியேனது அபிப்பிராயம்; சொந்த அநுபவமும் கூட! ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்று மகாகவி காளிதாஸரே.. (கூட்டத்தில் சலசலப்பு. கொத்தவரங்காய் மெதுவாக, ''பாரதியார், பாரதியார்'' என்று கத்துகிறார்) ஐ..ஆம்..சாரி; மகாகவி பாரதியாரே சொல்லியிருக்கிறார்! எனக்கு அடிக்கடி இந்த மாதிரி ஞாபக மறதி வந்துவிடுகிறது. ஹி..ஹி..ஒரு தடவை இப்படித்தான் ஒரு அவசரத் தபால் எழுதுவதற்காகத் தபால் ஆபீசுக்குப் போய் கார்டு வாங்கி எழுதி, அதிகப்படி பதிமூணு நயா பைசா தபால் தலை ஒட்டி, 'அவசரப் பட்டுவாடா' லேபிளும் ஒட்டிப் போட்டுவிட்டு வந்தேன். மறுநாள் காலையில் அந்தக் கார்டு அவசர அவசரமாக என்னிடமே வந்துவிட்டது! காரணம் என்னவென்றால் அத்தனை கைங்கரியமும்

செய்துவிட்டுக் கடைசியில் என் விலாசத்தையே எழுதிவிட்டேன்!

[மாநாடு விவாதத்தில் கலந்து கொள்ளக் கூடிய ஸ்ரீமான் பச்சை மிளகாய், வெண்டைக்காய் முதலியோர் மேடையில் வந்து அமருகின்றனர்]

ஸ்ரீமான் பச்சைமிளகாய்: இந்த மாநாடு கூட்டப்பட்டதன் காரணத்தையே மறந்து விட்டுத் தலைவர் அவர்கள் தனது சுய புராணத்தைப் பேசுவதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்!

தலைவர்: ஸ்ரீமான் பச்சை மிளகாய் என்னை மன்னிக்க வேண்டும். சற்று முன்னர்தான் அடியேனின் ஞாபக மறதியைப்பற்றிக் குறிப்பிட்டேன். சரி, விஷயத்திற்கு வருவோம். ஆமாம், நாம் இங்கே எதற்காகக் கூடியிருக்கிறோம்?

கொத்: (அடித் தொண்டையில்) காபி ஒழிப்பு!..காபி ஒழிப்பு!

தலைவர்: ஆமாம், காபி ஒழிப்பு! அதைச் சர்க்கார் அமலுக்குக் கொண்டு வருவதில் ஏற்படும் நன்மை தீமைகளை விவாதித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்காகக் கூடி இருக்கிறோம். காபி ஒழிப்பென்பது உலகிலேயே இதுதான் முதல் முயற்சி. மதுவிலக்கைப் போல் காபி ஒழிப்பையும் முதன் முதலில் அமலுக்குக் கொண்டுவரும் பெருமை நமது நாட்டிற்கே கிடைத்துள்ளது. இங்கே பல அன்பர்கள் தங்கள் கருத்தினை உங்களிடையே தெரிவிக்க இருப்பதால் என்னுடைய முன்னுரையை முடிவுரையிலே கூறிக் கொள்ளலாமென நினைக்கிறேன். அடுத்தாற்போல ஸ்ரீமான் வெண்டைக்காய் பேசுவார்.

புடலங்: திருவாளர் வெண்டைக்காய் பேசுவதற்கு முன்னர் நான் ஓர் அவசரப் பிரேரணை கொண்டு வர நினைக்கிறேன். அதாவது இந்தக் காலத்தில் எந்த மாநாடு நடந்தாலும் மாநாட்டு விஷயத்தை விட, 'மாநாட்டில் இருபத்தொரு வகையில் பட்சணங்களுடன்

விருந்து நடைபெற்றன' என்று பட்சணங்களின் ஜாபிதாவையே முக்கியமாகப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதைப் பார்க்கிறோம். அப்படி இருக்க அகில இந்திய மாநாடான இந்தக் கூட்டத்தில் கேவலம் ஒரு 'சிங்கிள்' காபிகூட இல்லாதது மிகவும் வருந்தற்குரியது..

தலைவர்: சரிதான்; 'காபி ஒழிப்பு மாநாட்டிலேயே காபி சாப்பிட்டார்கள்!' என்று நாளைக்கு எல்லாப் பேப்பர்களிலும் போட்டு விடுவார்கள்! ஆகையால் திருவாளர் புடலங்காயின் தீர்மானத்தை நான் நிராகரிக்கிறேன்! அடுத்து திரு வெண்டைக்காய் பேசுவார்.

வெண்: எல்லோருக்கும் வணக்கம். நம் நாட்டில் மதுவிலக்கைக் கொண்டுவந்து கள் குடியை ஒழித்து விட்டோம். மதுவுக்கு அடுத்த குடியான இந்தக் காபிக் குடியை ஒழிப்பதற்காக நமது சர்க்கார் காபி ஒழிப்பைக் கொண்டு வருகின்றனர். இது சம்பந்தமான பூர்வாங்க யோசனைகள் கூறுவதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம். இந்தக் காலத்தில் காபிக் குடியர்கள் மிகவும் பெருத்து விட்டனர். ஜட்கா இழுப்பவர்கூடப் 'பெட் காபி' கேட்கக் கூடிய நிலை ஏற்பட்டு

போலீஸ்காரர்: இருட்டுலே லைட் இல்லாமே சைக்கிளிலே ஏன் ஏறிவந்தே? நட, ஸ்டேஷனுக்கு!

பையன்; நீங்க இருட்டுலே இருப்பீங்கன்னு எனக்கு எப்படித் தெரியுங்க?

விட்டது! இது மிகவும் மோசமான நிலைமை. ஐம்பது அல்லது அறுபது ரூபாய் மாத வருமானமுள்ள மிகச் சாதாரணக் குடும்பத்திலும் காபிக்காக மாதம் இருபத்தைந்து அல்லது முப்பது ரூபாய் செலவழிக்கிறார்கள். என்ன அநியாயம் பாருங்கள்! காபியினால் ஏற்படும் கெடுதல்கள் பற்றி நாம் பள்ளி வகுப்புக்களிலேயே படித்திருக்கிறோம்! 'காபின்' என்ற அதிலுள்ள விஷம் நம் உடம்பை அணு அணுவாகக் கெடுத்துவிடக் கூடியது. யாராவது காசைக் கொடுத்து விஷத்தைச் சாப்பிடுவார்களா? காபி ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்தால் ஒவ்வொரு குடும்பத்திலும் எவ்வளவோ ரூபாய் மிச்சமாகும். ஆகவே காபி ஒழிப்பை உடனடியாக அமலுக்குக் கொண்டுவருமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

புட: அடியேனுக்கு ஒரு சந்தேகம். காபி ஒழிப்பை அமலுக்குக் கொண்டுவந்தால், காபித் தோட்டங்களிலும், காபிப்பொடி

பைத்தியம்!

ஆக்ஸ்போர்டு பெரிய அகராதி தயாரிப்புக்குப் பெரிதும் காரணமாக இருந்த டாக்டர் டிபிள்யூ. ஸி. மைனர் என்பவர் இவர். இதை அவர் எப்போது தயாரித்தார் என்றால் ஆச்சரியப் படுவீர்கள். இங்கிலாந்தில் குற்றவாளிப் பைத்தியங்களுக்கான ஆஸ்பத்திரியில் இவர் அடைப்பட்டிருந்தபோதுதான் தயாரித்து முடித்தார். இன்று அவர் செய்த பணி பிரசித்தி பெற்று விளங்குகிறது.

—ஜி. கார்த்திகேயன், சென்னை-5.

தயாரிப்பதிலும், காபிக் கடைகளிலும் வேலை பார்க்கும் ஏகப்பட்ட காபித் தொழிலாளர்களுக்கு வேலை போய்விடுமே! அவர்கள் கதி என்ன ஆவது?

தலைவர்: மிஸ்டர் பச்சை மிளகாய் அவர்களை இதற்குப் பதில் கூற வேண்டுகிறேன்.

பச்சை: காபி ஒழிப்பினால் வேலை இழக்கும் காபித் தொழிலாளர்களுக்கு அரசாங்கம்தான் நிவாரணம் அளிக்க வேண்டும். இது மிகவும் சுலபம். காபி ஒழிப்பு இலாகா ஒன்றை ஏற்படுத்தி அதற்கு ஒரு மந்திரியைப் போடவேண்டும்! இந்தக் காலத்திலேதான் இலாகா இல்லாத மந்திரி என்றுகூடப் போடுகிறார்களே! நாடெங்கும் ஏற்படும் காபி ஒழிப்புப் போலீஸ்கள் நியமிக்கப் பட வேண்டும். இந்த மாதிரிப் போலீஸ், காபி ஒழிப்பு முதலிய இலாகா வேலைகளுக்குக் காபி ஒழிப்பினால் வேலை இழந்த காபித் தொழிலாளர்களையே நியமிக்க வேண்டுமென்று ஒரு சட்டம் போட்டு விட்டால் அவர்கள் பிரச்னையும் சுலபமாகத் தீர்ந்து போகும் அல்லவா?

கொத்த: இந்தக் காபி ஒழிப்பினால் தங்களது வருமானம் பெரிதும் பாதிக்கப்படுமென்று, நமது காபி ஒழிப்பு மாநாட்டைக் கடுமையாக ஆட்சேபித்து இந்த ஊரிலுள்ள சாந்தா காபி, விஜயா காபி, நியூ கோல்டன் காபி முதலிய கடை முதலாளிகளும், மைசூர் கபே, மாடர்ன் கபே, ஆனந்த பவான், ஹிமாலயா ரெஸ்டாரண்டு முதலிய ஹோட்டல் அதிபர்களும் அரசாங்கத்திற்கு ஆட்சேபத் தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது!

பச்சை: இந்தமாதிரி ஆட்சேபங்களை எல்லாம் நாம் பொருட்படுத்தக் கூடாது. மதுவிலக்கு அமலுக்கு வந்தபோது இதைவிடப் பெரிய ஆட்சேபங்கள் வரவில்லையா?

கொத்த: எளியேனுக்கு ஒரு சிறு சந்தேகம்: அதாவது மதுவிலக்கு வந்ததற்குப் பிறகு பல கிராமங்களில் வீடு வீடாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாகச் சொல்கிறார்களே. அது மாதிரிக் காபி ஒழிப்பு வந்த பிறகு வீடு வீடாகக் கள்ளக் காபி போட ஆரம்பித்தால் என்ன செய்வது?

பச்சை: நண்பர் கொத்தவரங்காய்க்கு இந்தச் சந்தேகம் வந்திருக்க வேண்டிய அவசியமே

இல்லை. இந்தமாதிரிக் கள்ளக் காபிக் குடியர்களைக் கண்டுபிடிக்கத்தான் காபி ஒழிப்புப் போலீஸார் இருப்பார்களே! அதுமட்டுமல்ல; இந்தக் கள்ளக் காபிக் குடியர்களுக்குச் சட்டப்படி மிகவும் கடுமையான தண்டனை கொடுக்கப்படும்.

புடலங்: காபி சாப்பிடாவிட்டால் உயிரே போய்விடுமென்று சில பேர் சொல்கிறார்களே, அவர்களின் கதி என்ன ஆவது? உயிரை விட வேண்டியதுதானா?

பச்சை: சே. சே! உயிரை விடறதாவது! அப்படிக் காபி இல்லாமல் தீராது என்ற நிலைமை உள்ளவர்களுக்குத் தகுந்த மருத்துவ அத்தாட்சியின் பேரில் குறிப்பிட்ட அளவு காபி சாப்பிட அரசாங்கம் பெர்மிட்டுகள் வழங்கும்!

தலைவர்: நண்பர்களே! நான் முடிவுரையில் கூற நினைத்திருந்ததையெல்லாம் ஏற்கனவே மற்றவர்கள் கூறிவிட்ட படியால் நான் நமது மாநாட்டின் சிறு திட்டமாக மாநாட்டின் தீர்மான வாசகங்களைப் படிக்கிறேன்:

(1) காபி ஒழிப்பைச் சர்க்கார் உடனடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும்.

(2) காபி ஒழிப்பு இலாகா ஒன்றை ஏற்படுத்தி அதற்கு ஒரு மந்திரியையும் நியமிக்க வேண்டும்.

(3) காபி ஒழிப்பினால் வேலை இழக்கும் காபித் தொழிலாளர்கள் காபி ஒழிப்பு இலாகாவில் மற்றும் காபி ஒழிப்புப் போலீஸ் போன்ற வேறு உத்தியோகங்களில் நியமிக்கப்படவேண்டும்.

(4) கள்ளக் காபிக் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப் படவேண்டும்.

இந்தத் தீர்மானங்களை ஆதரிப்பதற்கு அறிகுறியாக எல்லோரும் கைதட்ட வேண்டுகிறேன்.

(கரகோஷம் விண்ணை எட்டுகிறது)

கோரஸ்: விடுதலை! விடுதலை! விடுதலை! காபிப் பொடிக்கும் விடுதலை! தேயிலைத் தூளுக்கும் விடுதலை! காபிப்பொடிக்கும், தேயிலைத் தூளுக்கும், சிக்கிரிப் பொடிக்கும் விடுதலை!

[திரை]

காவற்காரன்

பூவண்ணன்

"அறிவுலகம்" பத்திரிகையின் பிரம்மாண்டமான கட்டடத்தின் வாசலில் காவற்காரன் கந்தப்பன் நின்றுகொண்டிருந்தான். மணி ஐந்தாக இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. ஐந்தானதும், வரிசை வரிசையாக வெளியே போகும் வேலையாட்களைச் சோதனை செய்து அனுப்ப வேண்டும். கந்தப்பன் தனக்கெனப் போடப்பட்டிருந்த பெஞ்சுமீது உட்கார்ந்தான்.

அப்போது ஆறுமுகம் என்னும் வேலையாள் கையிலே ஒரு காகிதக் கட்டுடன் வாசலை நோக்கி வந்துகொண்டிருந்தான். கந்தப்பன் ஆறுமுகத்தைப் பார்த்தான். அவனுக்கு ஆறுமுகத்தைக் கண்டால் அடியோடு பிடிக்காது. ஆறுமுகத்திற்கும் கந்தப்பனைப் பிடிக்காது. இருவருக்கும் ஏதாவது தகராறு எப்போதும் நடந்துகொண்டே இருக்கும்.

எல்லோரையும் ஓரிரு நிமிஷங்களில் சோதனை செய்வான் கந்தப்பன். ஆனால் ஆறுமுகத்தை எளிதில் அனுப்பிவிட மாட்டான். அவன் அணிந்திருக்கும் சட்டையின் எல்லாப் பைகளையும் துருவித் துருவிப் பார்ப்பான்; ஒருமுறை அவன் பாக்குத்தூளைக் காகிதத்தில் மடித்து வைத்திருந்தான். கந்தப்பன் அதைக்கூட விடவில்லை. "அந்தப் பொட்டலத்தையும் அவிழ்த்துப் பார்த்தான். எப்போதாவது ஆறுமுகம் தன்னிடம் சிக்கிக்கொள்ளக் கூடாதா என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். கந்தப்பனைப் பழிக்குப் பழி வாங்கிவிடப் பதைபதைத்தான் ஆறுமுகம்.

அன்று ஆறுமுகம் கையிலிருந்த காகிதக் கட்டுடன், கந்தப்பனை அலட்சியமாகப் பார்த்துக்கொண்டே வாசலைத் தாண்டினான். உடனே கந்தப்பன், "சார், கொஞ்சம் இப்படி வாங்க" என்று அழைத்தவாறு இருந்த இடத்திலிருந்து எழுந்து சென்றான்.

"என்ன?" என்று ஆறுமுகம் கேட்டான்; அவன் ஆணவத்தோடு கேட்பதாகக் கந்தப்பன் நினைத்தான்.

"கையிலே என்ன?"

"கண் இருக்குதே. பார்த்தால் தெரியலே?"

"கண்ணிருக்கும்போதே காகிதக் கட்டுக்களைக் கடத்திக்கிட்டுப் போகலாம்னு நினைக்கிறே! கண்ணே இல்லேன்னு பேல் பேலாகச் சுருட்டிக்கிட்டுப் போயிடுவியே!"

"ஏய், மரியாதையாகப் பேசு" என்று ஆத்திரத்தோடு சொன்னான் ஆறுமுகம்.

"மரியாதைகொடுத்தாத்தானே மரியாதை கிடைக்கும்? இந்தக் காகிதக் கட்டை வெளியே எடுத்துப் போறியே. இதுக்குக் கேட் பாஸை என்னிடம் தரவேண்டாமா?" என்று கேட்டான் கந்தப்பன்.

"இதுக்குக் கேட் பாஸ் இல்லே" என்றான் ஆறுமுகம்.

"கேட் பாஸ் இல்லாமல் ஒரு துரும்புகூட வெளியே போகக் கூடாது; போக விடமாட்டேன்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் கந்தப்பன்.

"அப்படியா? எனக்கென்ன, நான் கொண்டு போய்க் கொடுத்தவர்களிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறேன். இதை யார் கொடுத்தனுப்பியது என்பது தெரிந்தால் நீ இப்படிப் பேசமாட்டாய்" என்று கூறிக் குறும்பாகச் சிரித்தான் ஆறுமுகம்.

கந்தப்பன், "யார் கொடுத்தால் எனக்கென்ன? நான் என் வேலையைச் செய்கிறேன்" என்று சொன்னான்.

ஆறுமுகம் கந்தப்பனை அலட்சிய மாகப் பார்த்துச் சிரித்துவிட்டு உள்ளே போய்விட்டான்.

ஆறுமுகம் போன பிறகுதான் கந்தப்பனுக்கு அச்சம் பிறந்தது. 'அதை ஒருகால் மானேஜர் கொடுத்தனுப்பினரோ? இவன் அவரிடம் போய் இல்லாததும் பொல்லாததும் சொல்லுவானே? நான் ஏன் அவசரப்பட்டு இப்படிச் சொன்னேன்? யார் கொடுத்தனுப்பியது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாமே' என்று எண்ணிக் கலங்கினுன் கந்தப்பன்.

கந்தப்பனின் நண்பன் கண்ணன் உள்ளே இருந்து வந்துகொண்டிருந்தான். கந்தப்பன் அவனை அழைத்தான்.

''கண்ணு, ஆறுமுகம் காகிதக் கட்டோடு உள்ளே போனுனே பார்த்தாயா?''

''பார்த்தேன்.''

''அதை அவனிடம் யார் கொடுத்தனுப்பியது? உனக்குத் தெரியுமா?''

''முதலாளி கொடுத்தனுப்பினுர். வெளியே நிற்கும் காரில் வைக்கச் சொன்னுர்.''

''நிஜமாகவா?''

''ஆமாம். அவர் சொல்லும் போது நான் அருகில்தான் இருந்தேன். ஏன், என்ன விஷயம்?''

கந்தப்பன் அதற்குப் பதில் அளிக்காமல் பதறினுன். ''ஓகோ! முதலாளியிடம் அந்த ஆறுமுகம் என்னென்ன சொல்லுவானே?'' என்று எண்ணி நடுங்கினுன். அப்போது வேருெரு வேலையாள் வந்து, ''கந்தப்பா! உன்னை முதலாளி அழைக்கிருர்'' என்று கூறினுன். கந்தப்பன் பயந்துகொண்டே முதலாளியிடம் சென்றுன்.

''கந்தப்பா! இந்தக் காகிதக் கட்டைக் கேட் பாஸ் இல்லாமல் வெளியே அனுப்ப முடியாது என்று சொன்னுயா?''—முதலாளி கேட்டார்.

''தெரியாமெ அப்படிச் சொல்லிட்டேனுங்க. இதை நீங்க கொடுத்தனுப்பினீங்க என்பது எனக்குத் தெரியாதுங்க'' என்று நடுங்கும் குரலில் சொன்னுன் கந்தப்பன்.

''தெரிந்திருந்தால்....?'' என்று இழுத்தார் முதலாளி.

''தெரிந்திருந்தால் பாஸ் கேட்காமலே அனுப்பியிருப்பேனுங்க. ஆனு நிச்சயமா எனக்குத் தெரியாதுங்க'' என்றுன் கந்தப்பன்.

''முதலாளி அனுப்பினு அதுக்குக் கேட் பாஸ் வேண்டாமா? நானே எடுத்துக் கொண்டா செல்கிறேன்? ஆறுமுகம்தானே எடுத்துப் போகிருன்? அவன் முதலாளி கொடுத்தனுப்பினுர் என்ருல் விட்டுவிடலாமா? அவன் அவ்விதம் பொய்

கூறியும் கடத்திக்கொண்டு போய் விடலாமல்லவா? எல்லாவற்றிற்கும் பாஸ் வாங்க வேண்டும் என்பது உனக்குத் தெரியாதா? முதலாளி அனுப்பினால் பாஸ் வேண்டாம் என்று யார் சொன்னது?'' முதலாளியின் குரலில் கடுமை தொனித்தது. கந்தப்பன் ஒன்றும் புரியாமல் கலங்கினான்.

''கந்தப்பா, நீ கேட்பாஸில்லாமல் வெளியே அனுமதிக்க முடியாது என்று சொன்னதாக ஆறுமுகம் சொன்னான். காவற்காரன் இப்படித்தான் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று நினைத்து நான் சந்தோஷப்பட்டேன். உனக்கு இன்று முதல் ஐந்து ரூபாய் சம்பளம் அதிகமாகக் கொடுக்க நினைத்தே உன்னைக் கூப்பிட்டனுப்பினேன். நீயோ, முதலாளி அனுப்பியது என்று தெரிந்தால் பாஸில்லாமல் விட்டிருப்பேன் என்று கூறுகிறாய். இப்படிப்பட்ட உன்னை வேலையிலிருந்தே எடுத்து விட வேண்டும். ஆனால் இம்முறை மன்னித்து விடுகிறேன். யார் அனுப்பினாலும் பாஸ் இருக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்.

கந்தப்பன் தலையசைத்தான்.

''சரி, போ. இனி ஜாக்கிரதையாக நடந்துகொள்.''

கந்தப்பன் முதலாளியின் அறையிலிருந்து வெளியே வந்தான். அவனுக்கு மயக்கம் வரும் போலிருந்தது. ''நான் மட்டும் அஞ்சி நடுங்காமல், 'ஆமாங்க, அப்படித்தான் சொன்னேன். அதுதானே என் வேலை என்று சொல்லியிருந்தா ஐந்து ரூபாய்ச் சம்பளம் உயர்ந்திருக்குமே'' என்பதை எண்ணி, கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத ஐந்து ரூபாய்க்காக வருத்தப்பட்டான் கந்தப்பன். ஆனால் அவனுடைய தன்மையை அறிந்த முதலாளி. அந்த மாதம் முதல் ஐந்து ரூபாய் சம்பளத்துடன் அதிகம் கொடுக்க உத்தரவிட்டிருப்பதாகப் பின்னால் வந்த குமாஸ்தா அவனிடம் கூறிவிட்டுச் சென்றான்.

ஓடும் ரெயிலில்...

ஈ. லட்சுமணன்

இரவு மணி ஒன்று.

சென்னையிலிருந்து புறப்பட்ட செங்கோட்டை பாசஞ்சர் ரெயில் கடும் வேகத்துடன் திருச்சியை நோக்கி வந்துகொண் டிருந்தது. பளபளப்பான தண்டவாளத்தில் 'கடக்..கடக்'..என்ற ஓசையுடனும் இரைச்சலுடனும் திருச்சியை நெருங்கிக்கொண் டிருந்தது.

பாலன் தன் தாத்தா சிவராம பிள்ளையுடன் அந்த ரெயிலில் பிரயாணம் செய்துகொண் டிருந்தான். அவன் பிரயாணம் செய்துகொண் டிருக்கும் பெட்டியில் அதிக ஆட்கள் இல்லாததால் சௌகரியமாய்ப் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டான்.

தூற்றல் தூறிக்கொண் டிருந்ததால் மழைத்துளி பெட்டியினுள் பிரவேசிக்கவே ஜன்னல் கதவுகளை அடைத்துவிட்டான் பாலன். படுக்கையில் படுத்த பாலனைப் பெஞ்சிற்கடியிலுள்ள மூட்டைப் பூச்சியும் தான் இருப்பதை ஞாபகப்படுத்திக் காட்டியது, தனது கடியின்மூலம். கொசுக்களின் ரீங்காரம் ஒரு புறம். மின்சார விளக்கை அபயமாய் அடைந்த பல அப்பாவிப் பூச்சிகள் மேலே வந்து உணர்ச்சியைக் கிளப்பின. இத்தனை தொந்தரவுகளுக்கும் இடையில் ஏதோ ஒரு நாவலை மங்கிய வெளிச்சத்தின் உதவியால், படுக்கையில் படுத்தவாறே படித்துக்கொண் டிருந்தான் அவன். தாத்தா உயரே ஸ்டாண்டில் படுத்துக் கொண்டார்.

அவனது கண்கள்தான் கதைப் புத்தகத்திலிருந்தனவே தவிர எண்ணங்கள் யாவும் மதுரையில் தன் பெற்றோர்கள் பேரிலும், தங்கை பேரிலும்தான்.

டால்மியாபுரம் ரெயில் நிலையத்தில் வண்டி நின்று புறப்பட்டது. அநேக மைல்கள் பிரயாணம் செய்து அலுத்துப் போன காளை மாடுகள் தண்ணீர் குடித்த பின் மெதுவாகச் சென்று வேகத்துடன் ஓடுவது போல் சென்றுகொண் டிருந்தது அந்த ரெயில்வண்டி.

பாலன் வேப்பேரி உயர் நிலைப் பள்ளியில் நாலாவது படிவம் பயின்று வந்தான். தன் பெற்றோரையும் உடன்பிறந்த தங்கைகளையும் மறந்து தன் தாத்தாவிடமிருந்து கல்வி கற்றுவந்தான். அவன் தாத்தா அவ்வளவு வயதானவரும் இல்லை. வேப்பேரியிலுள்ள பலசரக்கு மண்டியில் வெளியூர் விற்பனையாளராய் வேலை பார்த்து வந்தார். ஆதலால் சேசுப் பாட்டிக்குத் துணையாக அவனை அங்கே கூட்டிவந்து பள்ளியில் படிக்கவைத்தார்.

துடுக்குத்தனத்தில் பாலன் எவ்வளவு பெயர் பெற்றவனோ அதே போலத்தான் கல்வியிலும். ஒவ்வோர் ஆண்டும் கல்வியில் முதல்வனுகத் தேறி, இலவசப் படிப்பு வசதியும், பற்பல பரிசுகளையும் பெற்றான். ஒவ்வோர் ஆண்டும் படிப்பில் ஒருவன் முதல் பரிசு பெற்றான் என்றால் அது பாலனைத் தவிர வேறு யாருமல்ல எனலாம்.

மறுநாளிலிருந்து கோடை விடுமுறை. ஆதலால் அவன் தாத்தா அவனை மதுரைக்குக் கூட்டி வர இசைந்தார். விடுமுறை நாட்களைப் பெற்றோர்களுடன் ஆனந்தமாய்க் கொண்டாட அவனை மறுநாள் மதுரைக்குக் கூட்டிச் செல்வதாக உறுதியளித்தார்.

தங்கைமார்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசுகள் வழங்குவதற்காகச் சைனுபஜார் சென்று பற்பல பொம்மைகளும் நவீன கருவிகளும் புத்தம்புதிய சாமான்களும் வாங்கிப் பார்சல் செய்துகொண்டான். அவன் இன்ப நினைவு

கள் அவன் இதயத்தில் எம்பிக் குதிக்கவே எண்ண அலைகளினூடே ஆனந்தமாய்ப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

லேசான தூற்றல் புயல் அரக்கனின் உதவியால் மாபெரும் மழையாய்ப் பொழிய ஆரம்பித்தது. கனத்த ஆரவாரத்துடன் பருத்த மரங்கள் தலை சாய்ந்தன! இடியும், மின்னலும் தாக்க இரண்டொரு மரங்கள் கருகி நின்றன! அசுர மழையின் கொடுமையால் அருமையான நெற்பயிர்கள் வெள்ளத்தோடு அடித்துச் செல்லப்பட்டன!

பெரும் வெள்ளம் கரைகளை உடைத்துத் தன் எதேச்சாதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருந்த சமயம்....

இருளைக் கிழித்துக்கொண்டு தன் ஒளியின் உதவியால் பயங்கர மழையைத் துச்சமென மதித்துச் சென்றுகொண் டிருந்த ரெயில் திண்டுக்கல் நிலையத்தை அடைய இன்னும் இரண்டு மைல்கள்தான் பாக்கி. அதற்கு இடையூருக அந்தக் காட்டாற்றுப் பாலம் குறுக்கிட்டது.

பாலத்தின் மத்தியில் சென்றுகொண்டிருந்த ரெயில் அதல பாதாளத்தில் தலை குப்புறச் சாய்ந்தது. அந்தோ... என்ஜினைத் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்ருகப் பல பெட்டிகள் கவிழ்ந்து ஏகப்பட்ட சேதத்தை உண்டு பண்ணின. காட்டாற்றுப் பாலம் மக்களைப் பலி வாங்கும் பீடமாய் அமைந்துவிட்டது.

பரிதாபம்!..தந்தையை இழந்த குழந்தைகள்..தாயைப் பிரிந்த சேய்கள்! கணவனை இழந்த காரிகைகள்..மழலை மொழி பேசி பெற்ருேரை மயங்க வைக்கும் பச்சிளம் குழந்தைகள்..'ஐயோ..அம்மா..' என்றிடும் அபயக் குரல்கள்..இன்னும் எத்தனையோ....! காட்டாறு நீராக ஓடவில்லை. ரத்தத்தால் நிறைந்தோடியது..

இவர்கள் எல்லாம் இப்படி அநாதைகளாக அடித்துச் செல்லப்படும்பொழுது பாலனும் அவன் தாத்தா இருந்த பெட்டிக்கு மட்டும் என்ன விதிவிலக்கா? ஏதோ ஒரு மாதிரியாய்த் தப்பிவிட்டான் அவன், ஆற்றில் நீந்தி. ஆனல் அவன் தாத்தாவைக் காணவில்லை. விம்மல்களுக்கிடையே அலறினுன் பாலன்.

தூரத்தில் யாரோ ஒருவர் ஒரு உடலைக் கரைநோக்கி இழுத்துவரக் கண்டான். ஆம்..! அந்த உடல் வேறு யாருடையதுமல்ல! பாலனின் அருமைத் தாத்தாவினதுதான்.

ஆர்மண்ட் டீ ரேன்ஸ் என்ற பிரபல பிரெஞ்சுக் கவிஞர் இவர் (1626—1700). தம் வாழ்க்கைத் துணைவியின் மண்டை ஓட்டை மேஜை முன்னல் வைத்துக்கொண்டு அவள் ஞாபகார்த்தமாகத் தினந்தோறும் ஒரு கவிதையாக இயற்றி வந்தார். இப்படியே 43 ஆண்டுகள் சலிக்காமல் எழுதிய மேதை இவர்.

—ஜி. கார்த்திகேயன்,
சென்னை-5.

பயம் அவனைப் பற்றிக்கொண்டது. அச்சம் அவனை அணைத்துக்கொள்ளவே கோவெனக் கதறி அழுதான். பரிசுப் பொருள்கள் ஆற்றில் கொண்டு செல்லப்பட்டன.... பொம்மைகள் எல்லாம் அவனைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரித்தன.. அந்நேரத்தில் அவன் சிந்தனை பெற்றோர்களை நோக்கிச் சிறகு கட்டிப் பறந்தது.

'ஆனந்தத்துடன் தங்களை வரவேற்கத் தயாராய்க் காத்திருக்கும் பெற்றோர்களுக்கும், உற்ற நண்பர்களுக்கும், 'தாத்தாவைக் கைவிட்டேனே..' என்ற கொடூரமான தீனக் குரலையா அவர்களுக்கு விளம்ப வேண்டும்? ஆனந்தத்தால் தன்னிடம் வந்து, 'அண்ணா! எனக்குப் பரிசுகள் எங்கே?' என்று கேட்கும் தங்கைமார்களுக்கு அவன் யாது பதில் கூற? இன்பத்துடன் விடுமுறையைக் கழிக்க வேண்டும் என்று எண்ணி வந்த அவனுக்கு இந்தத் துன்ப நிலைதான் கிடைத்ததா? 'ஆண்டவனே? நீ என்னை இந் நிலையில்தானா சோதிக்க வேண்டும்..? வருண பகவானே. உனது வர்ண ஜாலம் இதுதானா? இயற்கை அன்னையே! உனது பரந்த விளையாடலா இது..?'

''தாத்தா...தாத்தா...தாத்தா!....''

''ஏன்டா! என்ன சத்தம்..? ஊர் வந்துட்டுது..எழுந்திரு.. எழுந்திருடா''..என்றதும் அவன் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தான். பிறகுதான் அனைத்தும் கனவு என்பதை அறிந்தான். 'பரிசுப் பொருள்கள் பத்திரமாயிருக்கிறதா?' என்று தட்டிப் பார்த்துக் கொண்டே தாத்தாவைப் பின்பற்றி வண்டியிலிருந்து இறங்கினான், பயங்கரக் கனவு கண்ட பாலன்.

முதலும் முடிவும்

இரா. முகி

1

கதிரவன் மலைவாயிலில் வீழ்ந்து கொண்டிருந்தான். இருள் மெல்லப் பரவத் தொடங்கியது. குலை உயிரும், குற்றுயிருமாய்க் கிடந்த படைவீரர்கள், துயரக் குரலில் முனகுவது லேசாக அந்தக் காட்டு வெளியில் எதிரொலித்தது. அந்த ஒலி அகமதின் உள்ளத்தைத் தொட்டது! பொழுது புலர்ந்ததி லிருந்து அந்திவரையில் கத்தி பிடித்து எத்தனையோ உயிர்களைக் கொன்றுவிட்டு, அமைதியை நாடி வந்த தனியிடத்தில்கூடவா வேண்டாத வேதனையின் தொனி கேட்க வேண்டும்?

அகமது தன்னருகில் அமர்ந்திருந்த ஆருயிர் நண்பன் அன்வரை ஏறிட்டுப் பார்த்தான். அன்வர், மலை உச்சியிலிருந்து வீழ்ந்து கொண்டிருந்த அருவியைக் கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதை அகமது அறிந்து கொண்டான். ஒருகால் தன்னைப் போல் அவனுக்கும் மனநிலை சரியாக இல்லையா? அல்லது ராஜபுத்திரத் தலைவன் ராணு சங்காராமின் படையை முறியடித்த, பாபர் சக்கரவர்த்தியின் படைவீரர்களில் தானும் ஒருவன் என்ற முறையில் வெற்றியை நினைத்து ஆனந்தப் படுகிருனு?

''அன்வர்! என்ன பலமான சிந்தனை?'' என்று புன்முறுவல் பூத்தபடி அகமது தன் உயிர் நண்பனைப் பிடித்து உலுக்கினுன். கனவிலிருந்து விழித்துக்கொண்டவன்போல் அன்வர் திடுக்கிட்டுத் திரும்பி, ''இல்லை, அகமத்!'' என்று மெல்லக் கூறினுன். அவனுடைய குரல் கம்மியிருந்தது. வார்த்தைகளில் இனம் காணமுடியாத வருத்தம் ஒலித்தது. 'அன்வர் எப்போதுமே இப்படித்தான்! வருந்த வேண்டிய நேரங்களில் சிரித்து மகிழ்வான்; மகிழவேண்டிய வேளைகளில் மனம் வருந்துவான். சில நாட்களுக்கு முன்பு முகலாயப் படை தோற்கடிக்கப்பட்டபோது முகலாயர்கள் மனம் குன்றிப் போனுர்கள். அன்வரோ உற்சாகத்தோடு காணப்பட்டான். இன்று ராஜபுத்திரர்களைத் தோற்கடித்து முகலாயர்கள் வெற்றியை நினைத்து மகிழ்கிருர்கள். இந்த நேரத்தில் இவனுக்குச் சோகம் ஏற்பட்டு விட்டது!' என்று அகமது தன் ஆருயிர் நண்பனின் குணத்தை எண்ணி மனத்துக்குள் சிரித்துக்கொண்டான்.

''போகலாம், எழுந்திரு அன்வர்! வெற்றியைக் கொண்டாட சக்கரவர்த்தி அற்புதமான விழா ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிருர். அதற்கு நாம் தாமதித்துச் செல்லக்கூடாது!'' என்று கூறியபடி அகமது, அன்வரின் கரங்களைப் பற்றி எழுப்பினுன். அன்வர் தன் கரங்களை நண்பனின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டான். அகமதை நிமிர்ந்து பார்த்தான்; கண்களில் நீர் தேங்கிற்று. முகத்தை அகமது பார்க்காமலிருக்க வேறு திசையில் திருப்பிக் கொண்டான். ''அகமத்! எனக்கு மிக அவசரமான வேலை ஒன்றிருக்கிறது. அதை முடித்துக்கொண்டு வெற்றி விழாவுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் வந்து விடுகிறேன்! நீ கூடாரத்திற்குச் சென்று சற்று ஒய்வு எடுத்துக்கொள்'' என்று நெடுகக் கூறிக்கொண்டே போய், தன்னுடைய குதிரையின்மீது அமர்ந்தான். விபரீதமான முறையில் நடந்து கொள்ளும் தன் நண்பனின் புதிய போக்கை உணர்ந்து கொள்ள இயலாத அகமது, காரிருளில் கரடு முரடான மலைப்பாதையில் பாய்ந்து

செல்லும் வெண்புரவியை நோக்கியவாறு திகைத்து நின்ருன். அவனுடைய உள்ளம் இன்பமறியாத கலக்கத்தில் மூழ்கியது.

2

"அன்வருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன?" என முணுமுணுத்தான் அகமது. தனித்து நின்ற அகமதின் குதிரை முன்கால்கள் இரண்டையும் உயரத் தூக்கி, ஒரு முறை கனைத்து, தானிருப்பதை எஜமானனுக்கு உணர்த்திற்று. அகமது குதிரையை அவிழ்க்கக் காலடி வைத்தான். அதற்குள், "ஆமாம், அகமது! உன் நண்பன் அன்வருக்கு இன்றைக்குக் காரியப் பைத்தியம் பிடித்து விட்டது" என்ற குரல் கணீரென்று எழுந்தது. அகமது திடுக்கிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான்; அவனுடைய கரம் வாளை உருவத் தயாராயிற்று.

வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்த விண்மீன்களின் மங்கிய ஒளி, அடர்ந்த மரங்களை ஊடுருவிச் சென்று லேசான ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. அன்வரும், அவனும் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகிலிருந்த ஆலமரத்தின் பின்புறமிருந்து ஒரு மனிதன் நெருங்கி வந்தான். அகமது கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தான். நெடிய தோற்றம்; பரந்த மார்பு; வலுவான முரட்டுக்கரங்கள்; எடுப்பான நாசி; அகன்ற நெற்றி; ஆழ்ந்த கண்கள். அகமதுக்கு அந்த மனிதனை அடிக்கடி பார்த்திருப்பது போல் தோன்றியது. ஆனால் எங்கே? எப்போது?

அந்த மனிதன் தன்னைப்பற்றி ஒன்றுமே சொல்லிக் கொள்ளவில்லை. "வெள்ளம் தலைக்கு மேல் சாண் போய், முழமும் போக ஆரம்பித்துவிட்டது! ஒரு முகலாயன், ராஜபுத்திரனுடன் உயிருக்கு உயிராக இருப்பதை இனிமேலும் நீடிக்கவிட்டால் முகலாய சாம்ராஜ்யத்திற்கு ஆபத்தாக முடியும்! என்ன அகமது? ஒரு ராஜபுத்திரனோடு நட்புக்கொள்ள நீ விரும்புவாயா?" என்று ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வகையில் கேட்டு நிறுத்தினுன் அந்த மனிதன்! அகமது, அவனுடைய புதிரான பேச்சைப் புரிந்துகொள்ளாமல் திகைத்தான். "ஒரு ராஜபுத்திரனின் தலைக்கும் என் வாளுக்கும் நட்பு ஏற்படுவதைத்தான் நான் விரும்புவேன்!" என்று ஆவேசமுடன் பதில் அளித்தான்.

அந்த மனிதன் மெல்ல நகைத்தான். கணப் பொழுதிற்குள் அவன் முகபாவம் கடுமையாக மாறிற்று. "அப்படியானல் உன் வாளுக்கு ஒரு நண்பனை அறிமுகப்

படுத்துகிறேன்! அகமது, நீ உன் உயிரினும் மேலாகக் கருதிக்கொண்டிருக்கும் அன்வர் யார் தெரியுமா?'' என்று கேட்டான். தன்னையும் தன் நண்பனையும் அறிந்த அந்த மனிதன் யார்? கேட்ட குரலாக இருக்கிறதே! அகமது எதையோ கேட்க வாயைத் திறந்தான். அந்த மனிதன் கேட்க விடவில்லை.

''அன்வர் பசுந்தோல் போர்த்த புலி! ராணு சங்காராமின் அந்தரங்கத்திற்குரிய அமர்சிங் என்ற ராஜபுத்திரன் அன்வராக முகலாயப் படையில் நடமாடி, ஒற்றர் வேலை செய்து வந்தான். பாபர் சக்கரவர்த்தி அவனைக் கண்காணித்துப் பொய்யான செய்திகளை வெளியிட்டு ராஜபுத்திரர்களுக்குத் தோல்வியை உண்டாக்கினர். அமர்சிங் எப்படியோ இந்த உண்மையை அறிந்து இன்று தப்பிவிட்டான். ஆனால் பாபர் சக்கரவர்த்தி விரும்பியிருந்தால் அவனைச் சிறைப்படுத்தி இருக்க முடியும்!'' என்று கூறி நிறுத்தினன். அகமதின் நெஞ்சு வெந்தது; கொதித்தது; பெருமூச்சு விட்டான்; கோபத்தால் கண்கள் சிவந்தன. ''அன்வராக நடித்த ராஜபுத்திரன் அமர்சிங்கை என் வாளுக்கு இரையாக்கிப் பழி தீர்த்துக் கொள்ளாவிட்டால் நான் ஓர் உண்மை முகலாயன் அல்ல! அல்லாவின்மீது ஆணை'' என்று உரத்த குரலில் கூறினன் அகமது.

அவனுடைய வார்த்தைகள் பயங்கரமாக எதிரொலித்தன.

அந்த மனிதனின் புருவங்கள் உயர்ந்து தாழ்ந்தன. ''உனக்கு வெற்றியுண்டாக அல்லா அருள்புரிவார். உன் நண்பனுக நடித்த ராஜபுத்திரனுக்கு உன் வாள்தான் ஏற்றது!'' என்று கூறிவிட்டு, வாய் விட்டு உரக்கச் சிரித்தான் அந்த மனிதன். பிறகு விரைந்து நடந்தான். 'ஆ..அந்தச் சிரிப்பு..!' அகமது தெரிந்து கொண்டான். மாற்றுடையில் வந்த அந்த மனிதர் முகலாயச் சக்கரவர்த்தி பாபரா?

3

நடு நிசி. அடர்ந்த மரங்கள் நிறைந்த தனியிடத்திலிருந்த அந்த மறைவான குகையில் ஏராளமான தீப்பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. ராஜபுத்திர வீரர்கள் வரிசையாக அமர்ந்திருந்தனர்; அவர்களுடைய ஒப்பற்ற தலைவன் ராணு சங்காராம் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்தான்; அவனுக்கு மிக அருகில் அமர்சிங் உட்கார்ந்திருந்தான்; அவன் கூறிய அரசியல் செய்திகளைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான், ராணு சங்காராம்; அன்று கண்ட தோல்வியை வெற்றியாக மாற்றுவதுபற்றி ராஜபுத்திரர்களின் உள்ளம் எண்ணிக்கொண்டிருந்தது.

திடீரென்று ராணு சங்காராமின் சிந்தனை வேறு திசையில் திரும்பிற்று. இருக்கையை விட்டு எழுந்தான்; எதையோ உற்றுக் கேட்கிற பாவனையில் நெற்றியைத் தடவிக் கொண்டான். தலைவனின் குறிப்புணர்ந்த ராஜபுத்திரர்கள் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டனர். எங்கிருந்தோ குதிரையின் குளம்பொலிகள் மெல்லக் கேட்டன. ராணு சங்காராம் தன்னருகில் இருந்த இரண்டு ராஜபுத்திரர்களைப் பார்த்து, ''குதிரையில் வருவது யாரென்று பார்த்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

சிறிது நேரம் கழிந்தது.

ராஜபுத்திர வீரர்கள் ஒரு வீரனை இழுத்து வந்து ராணு சங்காராமின் முன் நிறுத்தினர்கள். அமர்சிங் தலையைத் தூக்கிப் பார்த்தான். அவனுடைய கண்கள் குத்திட்டு நின்றன. ''யார்? நீயா, அகமத்?'' என்று வியப்பும் திகிலும் நிறைந்த குரலில் கூவினன்.

''ஆமாம்! உன்னைப் பழி வாங்க வந்திருக்கிறேன்'' என்று ஆத்திரத்தோடு கூறினன் அகமது. அமர்சிங்கை நோக்கிப் பாய்ந்தான். அவனை இருபுறமும் பிடித்திருந்த ராஜபுத்திர வீரர்கள் பிடியை இறுக்கினர்கள். ராணு சங்காராம் கரங்களை உயர்த்திச் சைகை செய்தான். தலைவனின் கருத்துணர்ந்த ராஜபுத்திர வீரர்கள் அகமதை அருகிலிருந்த கற்தூணேடு சேர்த்துக் கட்டினர்கள்.

ராணு சங்காராம் ஏளனத்துடன் நகைத்தான். ''நாளைய வெற்றிக்குரிய பலியாக இன்று ஒரு முகலாயனைக் கொல்வது மிகப் பொருத்தமாக அமைந்துவிட்டது. அகமத்; பழிவாங்க வந்த உன்மீது பழி தீர்த்துக் கொள்ளப் போகிறோம்.'' ராணு சங்காராம் அமைதியோடு

கூறினன். அவன் தன் உரையிலிருந்து குத்துவாளை உறுவினன்; அகமதின் உடல் சிலிர்த்தது. அவனுடைய விழிகள் இரண்டும் ராஜபுத்திரத் தலைவனின் கையிலிருந்த குத்துவாளை இமை கொட்டாமல் பார்த்தன.

அமர்சிங் குத்துவாளையும் அகமதையும் மாறிமாறிப் பார்த்தான்.

டாக்டர்: என்ன ஐயா டிரைவர், உடம்புக்கு என்ன?

நோயாளி: உடம்புக்கு ஒண்ணுமில்லீங்க! சளியும் காய்ச்சலுமா தலையைக் கிர்ருன்னு சுத்துது.

டாக்டர்: ஓ! தலை சுத்துதா? மணிக்கு எத்தனை மைல் வேகத்திலே சுத்துது?

நோயாளி: ......?....

பிறகு அகமதை நெருங்கி நின்றான். ராணா சங்காராமின் கண்டிப்பு நிறைந்த முகத்தை ஏறிட்டு நோக்கினான். "பிரபு! அகமது ஒரு முகலாயன் என்றாலும் அவன் என் உயிர் நண்பன். தவறி இங்கே வந்துவிட்டான். அருள் கூர்ந்து இம்முறை மட்டும் அவனுக்கு மன்னிப்பு அளியுங்கள், பிரபு! எனக்காக இரங்குங்கள்!" என்று அமர்சிங் தயங்கியபடி கூறினான். ராணா சங்காராமின் உதடுகளில் கேலி மறைந்தது. "ஒரு ராஜபுத்திரனின் பேச்சா, இது? அரசியல் உனக்காகவும் எனக்காகவும் பணியாது!" என்று முடிவான குரலில் கூறினான் ராணா சங்காராம். அகமதின் மார்பைக் குறி வைத்துக் குத்துவாளை ஓங்கி எறிந்தான். குத்துவாள் சீறிக்கொண்டு அகமதின் மார்பை நோக்கிப் பாய்ந்தது.

எதிர்பாராத முறையில் தன் நண்பன் அகமதிற்கு முன்னே நகர்ந்து, மார்பை உயர்த்தினான் அமர்சிங்! அவனுடைய புடைத்த மார்பு வாளைத் தாங்கிக்கொண்டது.

"ஐயோ, அமர்!" என்று பயங்கரமாக ஓலமிட்டான் ராணா சங்காராம்; ராஜபுத்திரர்களின் கண்கள் அமர்சிங்கின் மார்பில் குத்திட்டு நின்ற வாளில் நிலைத்தன! அகமது உணர்வற்று நின்றான்; அவன் கண்களிலிருந்து வழிந்த நீர் சொட்டுச் சொட்டாக அமரத்துவம் அடைந்த அமர்சிங்கின் புகழ் உடலிலே - குறிப்பாக மார்பில் - விழுந்து குருதியோடு கலந்து ஓடிற்று. ..



எதிரொலிப் பாலம்

நியூடன் நகரத்தில் அமைந்துள்ள விசித்திரமான இந்தப் பாலத்தின் கீழ் ஒரு மனிதன் குரல் கொடுத்தால் பதினேழு குரல்களில் எதிரொலி கிளம்புகிறதாம். இதை எதிரொலிப் பாலம் என்று அழைக்கின்றனர்.

—ஜி. கார்த்திகேயன், சென்னை-5.

பழைய பிள்ளையார்

ரா. சுப்பிரமணியன்

"வர வர நீங்கள் ஒன்றையுமே கவனிப்பதில்லை'' என்று புகார் கூறினுள் பார்வதிதேவி.

ஈசுவரனுக்குத் தெரியும், தேவி ஏன் அப்படிக் கூறுகிருள் என்று. இருந்தாலும் புரியாததுபோல், ''ஏன், என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

''பூலோகத்தைப் பாருங்கள்! உங்களை வேண்டினுல் என்ன வென்று கவனிப்பதே கிடையாது. இப்படி இருந்தால் நாஸ்திக வாதம் வளர்ந்து விடாதா?'' என்று கூறி விட்டுப் பூலோகத்தை நோக்கினுள். பரமசிவன் அவள் காட்டிய இடத்தில் நடப்பதைக் கண்டார். புன்முறுவலுடன், ''பொறுத்துப் பார்; புரியும்'' என்ருர்.

ராமனுக்கு எஸ்.எஸ்.எல்.ஸி. தேறவில்லை. அவனுக்குக் கோபம் தாங்கவில்லை. கோபம் யார்மீதும் அல்ல; அந்த அரசமரத்தடிப் பிள்ளையார் மீதுதான்.

ராமன் நன்ருகத்தான் படித்தான். பரீட்சை சமயத்தில் இரவு பன்னிரண்டு மணி, இரண்டு மணி வரைக்கும் படிப்பான். இரவு எட்டு மணிவரை படிப்பான். ஒன்பது மணிவரை தூங்குவான். பத்து மணிக்கு எழுந்து பன்னிரண்டு மணி வரை படிப்பான். மறுபடி இரண்டு மணிவரை தூக்கம். அப்புறம் படிப்புத்தான்; தூக்கமே கிடையாது. பரீட்சை முடிந்தவுடன் அவனுடைய எடையைப் பார்த்ததில் சரியாக ஆறு பவுண்டு குறைந்திருந்தது.

இதைத் தவிர அவனுடைய நண்பர்கள் கூறியது போல் அந்த அரசமரத்துப் பிள்ளையாரை 'வேரோடு பிடுங்கினுன்.' அதாவது காலையில் மூன்று பிரதட்சிணங்கள்; ஐந்து தோப்புக்கரணங்கள். வெள்ளிக் கிழமைதோறும் சாயந்தரம் ஒரு தேங்காய்; இதைத் தவிர பரீட்சை பாஸ் செய்தால் ஆயிரத்தெட்டு கொழுக்கட்டை செய்துவைப்பதாக வேண்டிக்கொண்டிருந்தான்.

ஆகவே ராமன் திடமாக நம்பியிருந்தான், பிள்ளையார் எப்படியும் பாஸ் செய்து வைத்துவிடுவார் என்று.

பரீட்சை முடிவு வெளியான செய்தித் தாளைப் பார்த்தவுடன் அவனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை. ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் பார்த்துவிட்டான். அவனுடைய நம்பர் காணப்படவில்லை. ஒரு வேளை தான்தான் சரியாகப் பார்க்கவில்லையோ என்ற சந்தேகத்துடன் இருக்கும்போது, ''என்னடா, 'கோட்'டாமே!'' என்று கேட்டவாறு அவனுடைய நண்பர்கள் செய்தியை ஊர்ஜிதம் செய்தார்கள்.

பரீட்சை தேருதது கூட ராமனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. 'இந்தப் பிள்ளையார் இப்படி மோசம் செய்துவிட்டார் பார்த்தாயா!' என்றுதான் அவனுக்கு அடங்காக் கோபம்.

* * *

அரசமரத்தடிப் பிள்ளையாருக்குக் கோயில் ஒன்றும் கிடையாது. வெயில், மழை, குளிர், காற்று—ஒன்றையும் லட்சியம் செய்யாமல் அந்தப் பிள்ளையார் அரசமரத்தடியில் அமர்ந்திருந்தார். அது எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பது யாருக்குமே தெரியாது. கிராமத்தில் உள்ள ரொம்ப வயதானவர்கள் மட்டும் சொல்லுவார்கள், அந்தப் பக்கத்து நிலத்தைச் சீர்திருத்தம் செய்தபோது புதைந்து கிடந்து அகப்பட்டதாக.

ஆனுலும் அரசமரத்துப் பிள்ளையார் என்ருல் அந்த ஊரில் ஒரே மதிப்பு. அவர் சக்திவாய்ந்தவர் என்று பெயர். எந்தக் காரியம்

ஆகவேண்டும் என்றாலும் அந்தப் பிள்ளையாரை வேண்டிக்கொண்டால் நிறைவேறும் என்பது பிரசித்தி. எங்காவது ஊருக்குப் போகிறவர்கள் அதற்குச் சூரைத் தேங்காய் போட்டுவிட்டுத்தான் போவார்கள். சூடம் ஏற்றிவைக்கும் சிறுவர்கள் எத்தனையோ பேர்!

அந்தப் பிள்ளையார் பெரும்பாலும் தனியாகத்தான் அமர்ந்திருப்பார். அவர் ஊருக்குப் புறம்பாய் அமைந்திருந்ததோடுகூட அந்தப் பக்கத்தில் ஒரு 'கறுப்பு' உலவிவருவதாக வதந்தி இருந்தது. ஆகவே பிள்ளையாரை வணங்கும் நேரம் தவிர மற்றக் காலங்களில் அங்கே கூட்டம் இருக்காது.

* * *

"ஓ, பிள்ளையாரே! என்னை இப்படி மோசம் செய்துவிட்டாயே!" என்று கேட்டான் ராமன்.

பிள்ளையார் பதில் சொல்லவில்லை.

"உன்னை இப்படியே உடைத்துப் பாட்டால் என்ன?" என்று ராமன் மீண்டும் ஆத்திரத்தோடு கேட்டான்.

பிள்ளையார் கல்லாகவே அமர்ந்திருந்தார்.

ராமனுடைய ஆத்திரம் எல்லை மீறிற்று. ஒரு பெரிய கருங்கல்லை எடுத்து ஓங்கி வீசினான். பிள்ளையாரின் துதிக்கை பின்னமாகி உடைந்து விழுந்தது. இப்போது ராமனுக்குப் பயம் உண்டாயிற்று. திரும்பியே பாராமல் ஓடிப்போய் விட்டான். இதைத்தான் தேவி ஈசுவரனுக்குக் காட்டினாள்.

* * *

சிறிது நேரத்திற்கெல்லாம் சேவார்த்தி ஒருவர் அந்த வழியே வந்தார்; மெய்ம்மறந்து பிள்ளையாரைத் துதித்துவிட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தார். பிள்ளையாரின் அலங்கோல நிலையைக் கண்டார்; திடுக்கிட்டார். "அட அக்கிரமமே!" என்று உரக்கக் கத்திவிட்டார்.

அவர் மிகவும் நல்ல மனிதர். ஊரில் எல்லோருக்கும் அவரிடம் மிகுந்த மதிப்பு உண்டு. அவர் இப்

படிக் கத்தியவுடன் அந்த வழியாக வந்த சிலர் ஓடிவந்தார்கள். பிள்ளையாரின் அலங்கோல நிலையைக் கண்டு அவர்களும் போட்ட கூச்சலில் கும்பல் சேர்ந்துவிட்டது.

அதில் பாதிப்பேருக்கு விஷயம் என்ன வென்பதே தெரியாது. வேடிக்கை பார்க்க வந்தவர்கள் சிலர், 'ஏதாவது பாம்பு வந்திருக்கும்' என்று கையில் தடியோடு வந்திருந்தார்கள்.

''இது என்ன அக்கிரமம்! ஊரிலே கேள்வி கேட்பாரே கிடையாதா? நாதியற்றுப் போச்சே'' என்று புலம்பினார் சேவார்த்தி.

''காலையில்கூட நல்லா இருந்ததே! அதற்குள் எந்தப் படுவாவி இந்த அக்கிரமத்தைச் செய்தவன்?'' என்றார் மற்றொருவர்.

''காலம் கெட்டுப்போச்சு!'' என்றார் இன்னொருவர்.

''பிள்ளையார் உடைக்கிறவர்கள் தான் இப்படிச் செய்திருக்க வேணும். அவர்களை நாம் சரியான படி மட்டம் தட்ட வேணும்'' என்றார் அந்த ஊர் மணியகாரர். ''ஆமாம் ஆமாம்'' என்று எல்லோரும் அதை அப்படியே ஆமோதித்தார்கள்.

''மூளி விக்கிரகம் பூஜைக்கு ஆகாது. வேறு விக்கிரகம் 'பிரதிஷ்டை' செய்வோம்'' என்று சிலர் சொன்னார்கள். ''கூடாது, அதன் சக்தி போய்விடும், பழைய விக்கிரகமே இருக்கட்டும்'' என்று மற்றவர்கள் சொன்னார்கள். கடைசியில் இந்தப் பிள்ளையாருக்கே தகரக் கொட்டகை போட்டுப் பூட்டி, தினந்தோறும் பூஜை நடக்க ஏற்பாடு செய்வதாகத் தீர்மானம் ஆயிற்று. ''இதற்கு ஆகும் செலவை ஊரில் எல்லோரிடமும் வசூல் செய்து பெறலாம்'' என்றார் மணியகாரர். எல்லோரும் ஏகமனதாக ஆமோதித்தார்கள்.

* * *

''பார்த்தாயா, தேவி!'' என்றார் ஈசுவரன்.

மதி மந்திரி!

விஜய நகர சாம்ராஜ்யத்தில் மிகவும் புகழுடன் விளங்கிய மந்திரி அப்பாஜியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? அவர் இறந்தபோது அவருடைய கழுத்தளவுக்கு அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டிருந்த முத்துக்களும் ரத்தினங்களும் வைரமும் வைடூரியமும் குவியல் குவியலாகக் காணப்பட்டனவாம். —ஜி. கா., சென்னை-5.

தேவி பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

''பிள்ளையார் கைங்கரியம் ராமன் மூலமாக நடைபெறவேண்டும் என்று இருக்கிறது. அப்படியிருக்க அந்தப் புண்ணியம் அவனைத் தவிர வேறு யாரைச் சேரும்?'' என்றார் பரமசிவன்.

பிள்ளையாரை உடைத்தபோது பொறுத்துப் பார்க்கும்படி சொன்னதன் பொருள் இப்பொழுது தேவிக்கு விளங்கிவிட்டது. எந்தக் காரியமும் ஒரு காரணத்துடன்தான் நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள். ஆனால் அவ்வளவு பக்தியுடன் இருந்த ராமனுக்குப் பிள்ளையார் ஏன் அநுக்கிரகம் அளிக்கவில்லை என்பதுதான் புரியவில்லை. ஈசுவரனைக் கேட்டதற்கு மறுபடியும், ''பொறுத்துப் பார்'' என்று சொல்லிவிட்டார் அவர்.

* * *

ராமனுடைய மாமா கல்கத்தாவிலிருந்து வந்திருந்தார். பெரிய வேலை; அவருக்குச் சம்பளம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என்று சொல்லிக் கொண்டார்கள்.

''இந்தப் பிள்ளை இப்படிப் 'பெயில்' பண்ணிவிட்டு நிற்கிறதே! பாஸானால் உன்னோடு அனுப்பலாம் என்றிருந்தேன்'' என்று வருத்தப்பட்டுக்கொண்டாள் ராமனின் தாயார்.

''என்ன பரீட்சை அக்கா! பாஸானால் மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது? என்கூட அனுப்பு: இரண்டே வருஷத்தில் மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்க வைக்கிறேன்'' என்றார் மாமா.

அங்கே வந்த ராமனைப் பார்த்து, ''என்னடா, என்கூட கல்கத்தாவுக்கு வருகிறாயா?'' என்று கேட்டார்.

''ரெடி மாமா'' என்றான் ராமன். தான் பிள்ளையார் உடைத்ததை யாராவது கண்டுபிடிப்பதற்கு முன் ஊரைவிட்டுப் போய் விடவேண்டும் என்று அவன் எண்ணினான்.

அடுத்த பதினைந்தாவது நாள் ராமன் மாமாவுடன் கல்கத்தாவுக்குக் கிளம்பிவிட்டான்.

* * *

பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. கோரையூர் கல கலப்பாக இருந்தது. கிராமமுன்சீபு பறந்து பறந்து ஏதேதோ உத்தரவிட்டுக்கொண்டிருந்தார்.

பிரபல தொழிலதிபரும், 'ஆஸ்திக மகாசபா'வின் கௌரவத் தலைவருமான திருவாளர் ராமன் அவர்கள் பத்து வருஷங்களுக்குப் பிறகு தன் சொந்த ஊருக்கு வரப் போகிறார் என்பதுதான் விசேஷம்.

ஆனால் அவர் அரசமடித்தடிப் பிள்ளையாரின் தகரக் கோயிலைக் கட்டடமாகக் கட்டித் திருப்பணி

செய்ய எல்லா உதவியையும் செய்யப் போகிறார் என்பதுதான் ஜனங்களுக்கு மிகுந்த ஆச்சரி யத்தை அளித்தது.

"எங்கோ கல்கத்தாவில் இருப் பவர் இந்த அரசமரத்தடிப் பிள்ளை யாருக்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்று என்ன வந்தது?" என்று வியந்தார் ஒருவர்.

"அவ்வளவு பக்தி! சொந்த ஊர் செழிக்கவேணும் என்பதில் அவ்வளவு சிரத்தை" என்று சொன்னார் மற்றொருவர்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு அரசமரத்தடிப் பிள்ளையார் இருக்குமிடம் அருமையான கட்டட மாக மாறிவிட்டது. மின்சார விளக்குகள் அந்தக் கோயிலைத் தேஜோமயமாக்கின.

திறப்பு விழாவன்று கோலாகல மாக எல்லோரும் கடவுளை வணங் கினார்கள். திருவாளர் ராமனும் வெண்மையான வேஷ்டி, அங்க வஸ்திரத்தோடு நின்றிருந்தார். 'கணகண' வென்ற மணியோசை யோடு விநாயகருக்குத் தீபா ராதனை நடந்தபோது அவர் கண் களிலிருந்து வழிந்த நீரைக் கண்டு, "என்ன பக்தி!" என்று எல் லோரும் வியந்தார்கள். அப்போது அவர், 'இந்தப் பிள்ளையாரை உடைத்தோமே' என்று மனத்தில் உருகியதன் விளைவுதான் அந்தக் கண்ணீர் என்பது யாருக்குத் தெரியும்?

* * *

"ராமன் இப்போது உயர் நிலை யில் இருக்கிறான் என்பது உண்மை. ஆனால் அவன் பரீட்சையில் பாஸா கும்படிச் செய்யாதது ஏமாற்றம் அளித்ததாகத்தானே ஆகும்?" என்று வினவினாள் பார்வதிதேவி.

"பிரார்த்தனையினால் மட்டும் வேண்டியதைப் பெற முடியாது. கடமைகளையும் ஒழுங்காகச் செய்ய வேண்டும். ராமன் இதை மறந் தான். பரீட்சை சமயத்தில் மட்டும் கடுமையாக உழைத்தவன் அதற்கு முன்னால் ஊர்தான் சுற்றினான். அதனால் அவன் பாஸாகவில்லை. தவிரவும் பலன் எதிர்பார்த்துச் செயல் புரியக்கூடாது. செயல் புரிவது மனிதனின் கடமை. அதற் குரிய பலன்கள் தாமாக அவனைச் சேரும். ராமன் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்யாவிடினும் அவனு டைய பிரார்த்தனையின் விசேஷத் தால் இந்தக் கௌரவத்தை அடைந்திருக்கிறான்" என்று விளக் கினார் ஈசுவரன்.

"புரிந்தது" என்றாள் தேவி.

* * *

அதே சமயத்தில் ராமன் தன் தாயாரிடம் சொல்லிக்கொண்டிருந் தான். "நான் அப்போ எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருந்தால் இந்தமாதிரி இருக்கமுடியுமா? எங்காவது கீழ்ப்பகுதிக் குமாஸ்தா வாக இருந்திருப்பேன். அதற்குத் தான் விநாயகர் என்னைப் பெயில் பண்ணினார் போலிருக்கிறது!" என்றான்.

"நம் கையில் என்ன இருக் கிறது! எல்லாம் ஆண்டவனின் அருள்! அவன் விருப்பப்படிதான் எதுவும் நடக்கும்" என்று சொன் னாள் தாயார்.

பால மேதை

ஒரு வயதிலேயே பாட்டு இயற் றும் சக்திபெற்ற இந்த அமெரிக்கப் பெண்மணி அமிமார்ஸி பீச் நாற் பது டியூன்களைப் பாடினாராம். நான் காவது வயதில் பல மெட்டுக்களைத் தாமே அமைத்திருக்கிறார்.

ஜி. கா., சென்னை-5.

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன் படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

வே. உலகநாதன், காரைக்குடி.

கே: 'ப்ளூ' விஷ ஜுரம் மீண்டும் வரப்போகிறதா?

ப: செப்டம்பர் அக்டோபர் வாக்கில் தென்னிந்தியாவில் மீண்டும் கடுமையான முறையில் அந்த விஷ ஜுரம் பரவக்கூடுமென்று சுகதார அதிகாரிகள் கருதுகிறார்கள். கூனூர் ஆராய்ச்சிக் கழகம் தடுப்பு மருந்துகளைத் தயாரித்து வருகிறது. விஷம்போல் பண்டங்களின் விலை ஏற்றத்தைத் தடுக்க முடியாதது போலவே இதையும் தடுக்க முடியாமல் போனால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. கிருமி நிபுணர்கள் டில்லியில் கூடி தடுப்பு ஊசித் தயாரிப்பைப் பற்றி விவாதிக்கப் போகிறார்கள். விவாதிப்பது என்றால் இப்போதெல்லாம் என்ன அர்த்தம் தெரியுமோ? தெரியாததைத் தெரியாது என்று ஒப்புக்கொள்ளாமல் இருப்பது என்று பொருள்.

ஆர். தங்கதுரை, கரூர்.

கே; திருச்சி ஜில்லாப் பகுதியில் பெட்ரோலியம் கிடைக்க வழியுண்டா?

ப: ஆராய்ச்சி தொடங்கப்பட்டுள்ளதாம். எண்ணெய் கிடைக்குமா கிடைக்காதா என்பதை ஆராய்ச்சி முடிந்த பிறகுதான் சொல்ல முடியுமாம். ஆராய்ச்சி முடியாமல் சொல்லவும் முடியாதல்லவா?

டி. பார்த்தசாரதி, லால்குடி

கே: ராஜாஜி முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட தீவிர வாதிகளுக்கு எதிரியா?

ப; தீவிர வாதிகள் அடுத்த ஐந்தாவது ஆண்டில் வரும் தேர்தலையே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ராஜாஜி அடுத்த ஐம்பதாண்டு வாழ்வை எண்ணிக்கொண்டு பேசுவதாகக் கூறுகிறார். பரீட்சை செய்து பார்ப்பதில் நிதானம் வேண்டும் என்பதே அவர் கட்சி. அவர் கட்சியை எங்கே, எந்த நிதானத்தில் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்வதில்லை என்பது பிறர் கட்சி. இரண்டிலும் உண்மை உண்டு என்பது தான் எஞ்சியுள்ளவர்களின் கட்சி.

எம். ராஜகோபாலன், விழுப்புரம்.

கே: கோபம் வராமல் செய்து கொள்ள வழி உண்டா?

ப: இன்றுள்ள சூழ்நிலையில் அதற்கெல்லாம் சரியான வழி இல்லை; ஆனால் தடுத்துக் கொள்ளலாம். எதற்கும் இந்த ஹீப்ரு பழமொழி உன் ஞாபகத்தில் இருக்கட்டும்: "நீ கோபம் கொள்ளும் ஒவ்வொரு நிமிஷமும், அறுபது விநாடி மகிழ்ச்சியைப் பறி கொடுத்துவிடுகிறாய்."

ஆர். வி. சரஸ்வதி, மதுரை.

கே: குளோரபாரம் என்ற மயக்க மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?

ப: ஒருவர் அல்ல; இருவர். ஸர் ஜேம்ஸ் சிம்ஸன் என்பவரும் பிளாரன்ஸ் என்பவரும்தான். ஆண்டு சரிவரத் தெரியவில்லை. 1847-ஆம் ஆண்டு என்று உத்தேசமாகக் கூறலாம்.

வி. கே. பிரசாத், சென்னை-4.

கே: மனிதன் நூறாண்டு வாழ சுலபமான வழிகள் உண்டா?

ப: உண்டு; எளிய வாழ்க்கையைக் கொள்வதே சிறந்த வழி. எளிய வாழ்க்கை என்றால் எளிய உணவும் கட்டுப்பாடான வாழ்க்கையும் என்று பொருள்.

ஆர். பத்தா, மாதுங்கா.

கே: இந்தியாவின் முடிசூடா மன்னர்கள் யார்?

ப: பட்டணக்கரை பிளாட்பாரங்களிலே படுத்து உறங்குபவர்கள் தான். அவர்கள், ராஜ்யத்தைப் பற்றியும் ராஜ்யங்கள் அவர்களைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.

வி, துரைராஜ், பெரம்பூர்.

கே: அரோரா போரியாலிஸ் என்றால் என்ன?

ப: துருவப் பிரபையைத்தான் அரோரா போரியாலிஸ் என்று கூறுகிறோம். துருவ நக்ஷத்திரம் உள்ள வடதுருவத்தில் காணும் ஒளிமண்டலமே அது.

த. ராமகிருஷ்ணன், விருதைமாநகர்:

கே: குடிசைத் தொழிலில் சிறந்த நாடு எது?

ப: ஜப்பான். அங்கே குடிசையில் வாழாதவனும் இல்லை. குடிசைத் தொழில் செய்யத் தெரியாதவனும் இல்லை.

ராம்ஜி, புனா.

கே: அமெரிக்காவுக்கோ ரஷ்யாவுக்கோ நீங்கள் போவதற்கான வசதிகள் கிடைத்தால் நீங்கள் முதலில் எந்த நாட்டுக்குப் போய் வர விரும்புவீர்கள்?

ப: அமெரிக்காவுக்குத்தான். இதில் என்ன சந்தேகம் உனக்கு? ஓசியில் வெகு தூரத்தில் உள்ள இடத்துக்குப் போய்விட்டு வருவது எப்படி? பக்கத்திலேயே உள்ள இடத்துக்குப் போய்விட்டு வருவது எப்படி? பல நாடுகள், கடல்கள், கண்டங்கள் தாண்டிச் சென்று வருவதைத்தான் நான் என்ன, யாருமே பொதுவாக விரும்புவார்கள்.

ஸி. ஆர். சாவித்திரி, கோவை.

கே: சிறுவயதில் நீங்கள் என் அண்ணன்மாதிரி கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை என்று சொன்னதுண்டா?

ப. உண்டு உண்டு உண்டு. இப்பொழுது சின்னவர்களாகவுள்ள எல்லாரும் சொல்கிற மாதிரிதான் நானும் சொன்னேன். அப்படிச் சொல்லிவிட்டு இப்பொழுது எல்லாரும் அவதிப்படுவது மாதிரிதான் நானும் அவதிப்படுகிறேன்.

பா. காசிலிங்கம், வண்ணையம்பதி.

கே: பொய் சொல்வதில் ஆண்கள் சாமர்த்தியசாலிகளா, பெண்கள் சாமர்த்தியசாலிகளா?

ப: ஆண்கள் முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்ப்பார்கள். பெண்களோ அதைக் கண்டதுண்டமாக நறுக்கி, சாம்பாரில் மறைக்கப் பார்ப்பவர்கள். ஆனால் பொய் இருக்கிறதே அது எந்தமாதிரி மறைத்தாலும் வெளியே தெரியும் சாமர்த்தியம் படைத்தது. சம்பாரில் மிதக்கும்; சோற்றிலோ மறையாது.

வா. கோ. நாயகம், நெல்லை.

கே: சாமர்த்தியசாலி, தைரியசாலி இவர்கள் இருவரில் நீங்கள் யாரைப் பாராட்டுவீர்கள்?

ப: சாமர்த்தியசாலியைத்தான்: தைரியசாலிகளைப்போல் நடிக்கவும் அவனுக்குச் சாமர்த்தியம் இல்லாமலா போகும்? தைரியசாலிக்குச் சந்தர்ப்பங்கள் குறைவு. சாமர்த்தியசாலிக்குத் தினம் தினம் சந்தர்ப்பங்கள்.

கே. வேங்கடராமன், குடந்தை.

கே: இந்த உலகத்தில் உங்கள் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் யார்?

ப: ஒருவர்தான்; அவர்தான் கடவுள். அவரிடம்தான் எனக்குப் பூரண நம்பிக்கை.

எஸ்.விசுவநாதன். சேலம் டவுன்.

கே: மரியாதைக்கும் மதிப்புக்கும் சம்பந்தம் என்ன?

ப: மரியாதை மேல் ஓடு. மதிப்பு உள்ளேயிருக்கும் பருப்பு.

ஸ்ரீராம், அடையாறு.

கே: ஆண்பிள்ளைகள் சமையல் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று நான் எண்ணுகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: என் அபிப்பிரயம் கிடக்கட்டும். ஒவ்வொரு பெண்ணும் அது அவசியத்திலும் அவசியம் என்றுதான் எண்ணுகிறுள்.

எஸ். வெங்கடாசலம், மந்தைவெளி.

கே: உலகத்திலேயே மிக நீளமான நதி அது?

ப: அமேஸான் நதி.

சு. முருகன், திண்டுக்கல்.

கே: அரசியல் மாணர்களுக்குத் தேவையா?

ப: அரசியலைப்பற்றிய அறிவு தேவை.

எஸ். பழனிசாமி, பல்லடம்.

கே: பொது அறிவை வளர்ப்பது எது?

ப: கூறிய திருஷ்டி.

அர. ஐயாசாமி, அவிநாசி

கே: இலக்கண வரையறையோடுதான் 'கண்ண'னுக்குக் கவிதைகள் எழுத வேண்டுமா?

ப: கண்ணனுக்கு மட்டும் என்று சொல்லாதே. இலக்கண வரையறைக்குட்பட்டுத்தான் கவிதையே எழுதவேண்டும். வரையறை என்பது நதிக்கு இரு கரைகளைப்போல. கரைகள் இல்லா நதி அழகற்றது மட்டுமல்ல; அபாயகரமானதுங் கூட.

ஸி. எஸ். அங்கமுத்து, நம்பியூர்

கே: நான் கண்ணன் நல்ல பத்திரிகை என்கிறேன். என் நண்பன் மற்றொன்றை நல்ல பத்திரிகை என்கிறுன். உங்கள் அபிப்பிராயம்..?

ப: நீங்கள் இருவர் கருதுவதும் சரி என்பதுதான். நல்ல பத்திரிகைகள் இரண்டு இருக்க முடியாதா? கண்ணன் நல்ல பத்திரிகை என்பதற்கும் கண்ணன்தான் நல்ல பத்திரிகை என்பதற்கும் வித்தியாசம் உண்டு. நீ ஒன்றை நல்லது என்கிருய். உன் நண்பன் மற்றொன்றை நல்லது என்கிருன். இதில் மறுப்பதற்கு என்ன இருக்கிறது?

எஸ். போஜராஜன், புரசைவாக்கம்

கே: மிருகங்களுக்குப் பேசத் தெரிந்தால் என்ன ஆகும்?

ப: என்ன ஆகிவிடப் போகிறது? மிருகங்களின் தனி நாடு கோரிக்கை எங்கும் கேட்கும்.

ஏ. சி. ஏ. பாஷா, மேல் ஆலத்தூர்.

கே: ஆங்கிலேயரிடமிருந்து சுதந்தரம் வாங்கிய கோல்டு கோஸ்ட் நாட்டின் இப்போதையப் பெயர் என்ன?

ப: கானு.

சு. பத்பநாபன், கண்டி.

கே: இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் வாரப் பத்திரிகை எது?

ப: வாரத்துக்கு ஒரு புள்ளி ஏறுகிறது, ஒன்று குறைகிறது. இதிலே எது சரி, எது சரியல்ல என்று சம்பந்தப்பட்டவர்களுக்கே குழப்பமாய் இருப்பதாகத் தெரிகிறது. போட்டி போட்டுக்கொண்டு பத்திரிகை விற்பனை அதிகமாகிறதா, அல்லது வெறும் பேச்சு அதிகமாகிறதா என்று புரியவில்லை.

ந. சின்னத்தம்பி, திருச்செங்கோடு

கே: என்ன ஐயா, விழிக்கிறீர்கள்? சட்டென்று கதை எழுத ஒரு யோசனை சொல்லுங்களேன்!

ப: அவ்வளவு சட்டென்று எழுத்தாளனுக வேண்டும் என்று ஆசைப்படாதே, சின்னத் தம்பி! கொஞ்சம் நிதானமாக ஆசைப்படேன்.

என். வேதகிருஷ்ணன், மாயூரம்

கே: மறப்பது என்பது குற்றமல்லவா?

ப: நன்றி மறப்பது குற்றம். தீயதை மறப்பது குற்றமன்று.

ஏ. நஜீர் அலி, நெல்லிக் குப்பம்

கே: பணத்தோடு பகுத்தறிவும் சேர்ந்து விட்டால்—?

ப: விபரீதம்தான்; பண்பு சேர்ந்திருக்க வேண்டும் அப்பொழுதுதான் எல்லாருக்கும் நன்மை. கிரஸின், நெருப்பு இரண்டும் ஹரிகேன் விளக்கிலே சேர்ந்தால்தான் வெளிச்சம். இல்லையோ விபரீதமாகலாம் அல்லவா?

நள்ளிரவில் கையெழுத்து

கே. எஸ். எஸ்.

'ஆஹா! இவ்வுலகம்தான் எவ்வளவு கொடூரமானது! சேர்ந்தாற் போல் பதினைந்து நாட்கள் கூட குஷியாக இருக்க முடியாது போலிருக்கிறதே! பரீட்சையும் முடிந்தது. ஆவலுடன் எதிர்பார்த்த விடுமுறையும் வந்தது. அதை வாயில் வைத்து ருசி பார்த்து, திருப்தியுடன் சுவைத்து ஆனந்திப்பதற்குள் — வந்ததே பெரிய இடி!

'ஆம்! இந்தத் தேர்வை அறிவிப்பதற்காக ரிஸல்ட் என்று ஒன்று எழுதி ஒட்டி விடுகிறார்களே, அதைத்தான்!

''ஆஹா, ஒரு வழியாய் 'ப்ளுக்'லே தேறி விட்டோம், அப்படியே இந்தச் சமாசாரத்துக்கு ஒரு முழுக்குப் போடலாமென்றால்—

இதேதடா சனி!

'தலைவலி போய்த் திருகுவலி வந்த கதையாய், இப்பொழுது ப்ராகிரஸ் ரிபோர்ட் வந்து நிற்கிறது! ஆண்டவனே! நிம்மதியாய் வாழ்க்கை நடத்தி 'குஷியாகப் பொழுது போக்க விரும்பும் மாணவனின் வாழ்க்கையினூடே இவ்வளவு இடையூறுகளைப் புகுத்துதலும் உன் திருவிளையாடலோ?'

'நாணு' என்னும் நாராயணன் மனத்தில் இத்தகைய எண்ணங்களனைத்தும் ஒரு நொடியில் தோன்றி மறைந்தன.

''நாணு....!''

அவசர அவசரமாக அவன் அந்தப் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டை ஒளித்து வைப்பதற்கும், அவனுடைய அம்மா அறையை அணுகுவதற்கும் சரியாயிருந்தது.

''ஏண்டாப்பா! டிபன் சாப்பிட்டுட்டு இதெல்லாம் செய்யப்படாதோ?''

''இல்லேம்மா ....வந்து....'' என்று கூறியவாறே நைஸாக நழுவிப்போய் டிபனை ஒரு நொடியில் முடித்துவிட்டு விளையாடக் கிளம்பினான்..'அப்பாடா! அம்மாவை ஏமாற்றியாச்சு! இனிமேல் அப்பாவிடம் அவர் சந்தோஷமான 'மூடு'லே இருக்கிற சமயமாகப் பார்த்து நீட்ட வேண்டியது..'' இவ்விதமாக அவன் மனம் அசை போட்டுக்கொண்டிருந்தது.

* * *

அன்றிரவு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த நாராயணனை வாசற்கதவின் கிரீச்சொலி கவர்ந்தது. அடிமேலடியெடுத்து வைத்து வாசற்கதவை அடைந்தவன், அங்கு அவனுடைய தந்தையைக் கண்டு ஸ்தம்பித்து நின்றான்.

அவனுடைய அப்பா, மெதுவாய் வெளியே சென்றார். பிறகு கதவைச் சத்தமிடாமல் வெறுமனே சாத்தி வைத்துவிட்டு வெளியே கிளம்பினார். நாணுவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. கோடி வீட்டில் அவன் அப்பாவும் மற்றவர்களும் சீட்டாடப் போகின்றனர்!

நாராயணனின் மூளை கிடுகிடு வென்று துரிதமாக வேலை செய்தது. நாலே எட்டில் தாவிப் போய் அப்பாவைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான் ''திரு..'' என்று கூவினான்.

அப்பா நாணுவின் வாயைப் பாதியிலேயே பொத்திவிட்டு, ''டேய்! திருடன் ஒண்ணும் இல்லேடா. நான்தான்!'' என்றார்.

''இல்லேப்பா. நீ இந்த வேளையிலே சீட்டாட..''

''உஷ்..சத்தம் போடாதேடா. அம்மா எழுந்துவரப் போகிறாள்.''

''சரி; சத்தம் போடலை. இதோ இதில் ஒரு கையெழுத்து மட்டும்..'' என்றான் நாணு.

அப்பா ஒரு நிமிடம் திகைத்து நின்றார். பிறகு, ''சரி, சரி. இவ்வளவுதானே! ஆனா அம்மா கிட்டே மூச்சு விடாதே!'' என்றார்.

நாணு வெற்றிப் புன்னகை செய்தான்.



எண்ணிலே படங்கள்

'மூட்டை'

நான் வெகு நாட்களாகப் போட்டு வரும் இந்த எண்ணிலே படங்களால் எத்தனை பேர்கள் பலனடைந்தார்கள் என்று எனக்குச் சந்தேகம் எழுந்தது. அதற்கேற்ப நான் ''கண்ணன்'' ஆசிரியரைச் சந்தித்தபொழுது அவர், ''நீங்கள் எப்படி இதுபோல் எண்ணிலே படங்களை வரைகிறீர்கள், அதை எப்படி உபயோகிப்பது என்பது பற்றி எழுதினல் குழந்தைகளுக்கு உபயோகமாக இருக்குமே'' என்ருர். அதற்கிணங்க அதைப் பற்றி இப்பொழுது உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக நான் என்னென்ன படங்கள் வரைய வேண்டுமோ அவற்றைத் தொடர்ந்தாற் போல் பூர்ணமாக வரைந்து கொள்வேன். பிறகுதான் அந்த உருவ அமைப்புக்கு ஏற்றவாறு எண்களை ஒவ்வோர் இடமாக அமைப்பேன். என்னுடைய படங்களிலெல்லாம் 2, 3, 5 ஆகிய எண்களே அதிகமான அம்சங்களை அமைப்பதற்குப் பெரிதும் உபயோகமாகின்றன. 1, 6 ஆகிய இந்த இரண்டு எண்களும் சமயசஞ்சீவியாக அநேக இடங்களில் உதவியிருக்கின்றன.

எண்களை அங்கத்திற்கேற்ப அமைத்ததும் பிறகு படத்தை எண்களுடைய அமைப்பின் உதவியைக் கொண்டு வேண்டிய அளவில் சிறியதாகவோ, பெரியதாகவோ வரைந்து விடுவேன்.

இப்பொழுது நீங்கள் அந்தமாதிரி வரையப்பட்ட 'எண்ணிலே படங்களின்' உதவி கொண்டு படங்களை எப்படி வரைவது என்பதைப் பார்ப்போம். பிரசுரமான படங்களிலுள்ள எண்களைக் கண்டுபிடித்து அந்த எண்களின் உதவியைக் கொண்டு அதேமாதிரியாகப் படங்களைப் போட்டுக் கொள்ளுங்கள். (இரண்டு மூன்று தடவைகள் பார்த்து வரைந்தால் பிறகு கொடுக்கப்பட்ட படங்களை நீங்கள் சுலபமாகவும் நன்ருகவும் அதுபோலவே வரையலாம்) பிறகு இடைவெளிகளையெல்லாம் தொடர்ந்து பூர்த்தி செய்துகொள்ளுங்கள். அதன் பிறகு வேண்டிய முறையில் படங்களை அழகு படுத்திக் கொள்ளலாம். உதாரணத்திற்குக் கீழேயுள்ள படங்களைப் பார்க்கவும். இனிமேல் நீங்களே கூட வரையலாம்.



வேடிக்கைக் கணக்குகள்

(1) ரொம்பச் சுலபமான கணக்கு. ஆனால் யாருமே சுலபமாக ஏமாந்து போவார்கள். கணக்கு இதுதான். நூறுக்குள் எத்தனை ஒன்பதுகள் இருக்கின்றன?

(2) அப்பா, அம்மா, இரு பையன்கள் ஆக நால்வரும் ஓர் ஆற்றின் கரையில் இருக்கிறார்கள். அக்கரை போக வேண்டும். ஒரே ஒரு படகு தான் இருக்கிறது. படகோட்டி இல்லை. எல்லாருக்கும் படகு ஓட்டத் தெரியும். ஆயினும் படகில் ஒரு தடவையில் பையன்களானால் இரு பையன்களும், பெரியவர்களானால் ஒருவரும்தான் செல்லலாம். எப்படி அக்கரை போய்ச் சேர்வார்கள்?

(விடைகள்: கடைசியில்.) —நா. கிருஷ்ணமூர்த்தி, திருமங்கலம்.

ஆறுதல்

தாங்கள் தக்க சமயத்தில் பரீட்சையில் தவறிய மாணவர்களுக்கு ஆறுதல் கூறியிருக்கிறீர்கள். அதுபற்றி நான் மிகுந்த சந்தோஷமடைகிறேன். வீட்டிலே உள்ளவர்களாலும் நண்பர்களாலும் அலட்சியம் செய்யப்பட்டு மனச்சோர்வு அடைந்திருக்கும் நண்பர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்திருக்கிறீர்கள்.

—எஸ். சாமிநாதன், குடந்தை.

அந்தச் சிலை

ஆரம்பம் முதல் இறுதி வரையில் சுவையும் விறுவிறுப்பும் நிறைந்திருக்கிறது.

—ஜெ. ஸலாஹுத்தீன், கோட்டாறு.
என். எஸ். நரசிம்மன், நாமக்கல். மற்றும் பலர்.

ஒரு தமாஷ்

டாக்டர்: ஏன் ஐயா, ஜுரம் என்று சொல்லிவிட்டு, உம்மை யார் ஐயா தோசையை வைத்துக்கொண்டு தின்னச் சொன்னது?

நோயாளி: நீங்கள்தானே ஸார், சாதம் சாப்பிடக்கூடாது என்று சொன்னீர்கள்! அதற்காகத்தான் சாதம் சாப்பிடாமல் தோசை தின்கிறேன்!

—குணாளன், திருநெல்வேலி.

யார் எழுதலாம்?

கண்ணன் அங்கத்தினர்கள், சந்தாதார்கள் அனுப்பும் கதைகளைத் தவிர வேறு யார் எழுதினாலும் கண்ணனில் பிரசுரிக்க மாட்டீர்களா?

—ஜி. கங்கா, சென்னை 28.

(அப்படி அல்ல. யார் எழுதினாலும் நன்றாக இருந்தால் பிரசுரிப்போம். கண்ணன் அங்கத்தினர்களுக்கு முதல் சலுகை. அவ்வளவுதான். ஆ-ர்.)

சித்திரக்கதை

சித்திரத் தொடர்கதை இரண்டு பக்கமே வெளியிட்டு வருகிறீர்கள்; தயவுசெய்து நாலு பக்கங்களேனும் இனி வெளியிடுங்கள்.

—இ. தவமணிதேவி, ஆரப்பந்தை (இலங்கை).

கதையில் வராத பாத்திரம்

'பனங்கிழங்கு' என்ற நாடகக் கதையில், கேசவன் என்னும் பாத்திரம் சம்பாஷணையில் எங்கும் கலந்து கொள்ளவில்லையே, காரணம் யாது? கதையில் சேராத பாத்திரத்துக்குக் கதையில் என்ன வேலை?

—ச. ஆ. கேசவன், கமுகாசலபுரம்.

குற்றச்சாட்டு சரியல்ல

'புதிதாக வந்தவர்' என்ற கதை என் சொந்தக் கற்பனைக் கதை. அது காப்பியடித்தது அல்ல. கண்ணனில் இடம் கிடையாது என்று குறிப்பிட்டது கண்டு வருந்துகிறேன்.

—வி. ராஜாமணி, பங்களூர் ஸிடி.

(நண்பர் ராஜாமணி சொல்வதை நான் ஏற்றுக்கொள்வது போலவே கண்ணன் வாசகர்களும் ஏற்பார்கள் என நம்புகிறேன். ஆரம்ப எழுத்தாளரான ராஜாமணி பல சிறந்த கதைகள் எழுதிப் புகழ்பெற, கண்ணன் இனித் தடையாக இராது. ஆ-ர்.)

கத்தரிக்காய்ப் பாட்டு

கத்தரிக்காய் நல்ல கத்தரிக்காய்
காம்பு நீண்ட கத்தரிக்காய்
நாராயணன் தோட்டத்திலே
நட்டு வைத்த கத்தரிக்காய்!
பச்சை நிறக் கத்தரிக்காய்
பச்சடி செய்யும் கத்தரிக்காய்
புதுச்சேரி கத்தரிக்காய்
புதுமையான கத்தரிக்காய்!
பொறியல் செய்யும் கத்தரிக்காய்
அவியல் செய்யும் கத்தரிக்காய்
மாமனுக்கும் மாமியாருக்கும்
மகிழ்ச்சி தரும் கத்தரிக்காய்!

—டி. ஏ. கதிர்வேல், திருச்செங்கோடு.

வேடிக்கைக் கணக்குகள் விடை

(1) 11 ஒன்பதுகள் என்றுதான் பெரும்பாலோர் சொல்வார்கள். அது தவறு. மொத்தம் 20 ஒன்பதுகள், 9, 19, 29, 39, 49, 59, 69, 79, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99,. சரிதானா?

(2) முதலில் இரு பையன்களும் சென்று ஒரு பையன் தங்கிக் கொண்டு மற்றொரு பையன் திரும்பிவர வேண்டும். பிறகு அப்பா செல்ல வேண்டும். அங்கிருக்கும் பையன் இப்போது வரவேண்டும். பிறகு இரு பையன்களும் சென்று ஒரு பையன் தங்கிக்கொண்டு மற்றொரு பையன் திரும்பி வரவேண்டும். பிறகு அம்மா செல்ல வேண்டும். அங்கிருந்த பையன் வந்து, இந்தப் பையனையும் அழைத்துக்கொண்டு அக்கரை போய்ச் சேரலாம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர் கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம்.

நிபந்தனைகள்:—

1. சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

2. காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுத வேண்டும்.

3. கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

5. குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

6. முடிவுத் தேதி 31-8-'57.

—ஆசிரியர்.

கிளைக் கழகம்

மேலச்சிந்தாமணி-
திருச்சி

உபதலைவர்: எஸ். பி. ராஜகோபால்
செயலாளர்: வேங்கடேசன்
பொருளாளர்: சந்திரசேகர்

பத்துப் பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கல்யாணசுந்தரம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'முரசு' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் சிறுவர் வாசகசாலையும் நடத்தப்படுகின்றன. மாதந்தோறும் சிறுவர் இலக்கியக் கூட்டமும் நடத்தப்படுகிறது. கதை முதலியனவற்றை வேங்கடேசன், 12 மாதுளங்கொல்லை, மேலச் சிந்தாமணி, திருச்சி-2 என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

கோனப்பட்டு
(திருச்சி ஜில்லா)

உபதலைவர்: M. R. நாச்சியப்பன்
காரியதரிசி: P. L. பழனியப்பன்
உபகாரியதரிசி: P. R. ராமசாமி
பொக்கிஷதார்: M. பழனியப்பன்

28-6-57-இல் இவ்வூர் சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீ K. சுப்பிரமணியம் B.A., L.T., அவர்கள் தலைமையில் அங்கத்தினர்கள் ஒன்று கூடி மேலே கண்ட நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துத் துவக்க விழாவைச் சிறப்புறக் கொண்டாடினார்கள். அவ்வமயம் வித்துவான் திரு. மு. ராமையா அரிய சொற்பொழிவு ஆற்றினார். 'தமிழ்முடி' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் வாசகசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முரு. நாச்சியப்பன், கண்ணன் கிளைக் கழகம், சன்னக்குடியார் வீதி, கோனப்பட்டு, திருச்சி ஜில்லா என்ற விலாசத்துக்குக் கதைகள் முதலியன அனுப்பலாம்.

கொழும்பு-13

உபதலைவர்: வி. எப். சந்திரன்
காரியதரிசி: எம். பி. ராசநாயகம்
பொக்கிஷதார்: எம். தாகுர்

ஆறு பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'கண்மணி' (மாத இதழ்), 'அணில்' (மாதம் இருமுறை) என்ற கையெழுத்துப் பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. கதை, கட்டுரை முதலியன 9/41, சென் அந்தோணி மாவத்தை, கொழும்பு-13 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர் கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம்.

நிபந்தனைகள்:—

1. சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

2. காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுத வேண்டும்.

3. கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

5. குழந்தைகள் - குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

6. முடிவுத் தேதி 31-8-'57.

மற்ற விவரங்களை, 'குழந்தைகளே!' பகுதியில் காணலாம்.

—ஆசிரியர்.

பேனா நண்பர்கள்

1. ஆர். எம். வயிரவன், c/o ஈஸ்டர்ன் கெமிகல் இண்டஸ்டிரீஸ், தபால்பெட்டி-29, மதுரை.

2. எஸ். ஆர். சாமி, புதூர், வழி கோவில்பட்டி, திருநெல்வேலி ஜில்லா.

3. வி. தியாகராஜன், மாதாகோயில் தெரு, கனுவாப்பேட்டை, வில்லியனூர், வழி பாண்டிச்சேரி.

4. டி. எஸ். சண்முகராஜா, சென் ஜோசப் கல்லூரி, கம்பளை, இலங்கை.

5. ஏ. எம். அப்துல் கரீம், 'ஆயிஷா மன்ஸில்' பட்டாணிச்சிப் புளியாங்குளம், வவுனியா, இலங்கை.

6. எஸ், பி. ராமநாதன், வெளிகங்கை, உளப்பனை, இலங்கை.

7. சி. எஸ். கே. நவநீதன், 117, அரண்மனை வீதி, மதுரை.

கிளைக் கழகம்

கனுவாப்பேட்டை (வழி) பாண்டிச்சேரி

உபதலைவர்: வெ. தியாகராஜன்
செயலாளர்கள்: ராமலிங்கம்
வை. சச்சிதாநந்தம்
பொருளாளர்: ப. ராஜேந்திரன்

ஏழு பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'கல்விக் கதிர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் வாசகசாலையும் நடத்தப்படுகின்றன. சிறுவர் இலக்கியக் கூட்டமும் நடைபெறுகிறது.